தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

தமிழ் மரபுத் தினை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

ஏப்ரல் – 2026

42

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

Tamil Marabu Thinai

தமிழ் மரபுத் திணை — 42

திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை

[ஏப்ரல் — 2026]

தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

Websites:
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Facebook:
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ: Germany

Branches: India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

ஆசிரியர் குழு :
1. முனைவர் க. சுபாஷிணி
2. முனைவர் தேமொழி
3. முனைவர் சிவ. இளங்கோ
4. முனைவர் கௌதம சன்னா
5. முனைவர் பக்தவத்சல பாரதி
6. முனைவர் கண்ணன் நாராயணன்

Attribution-NonCommercial-ShareAlike
4.0 International (CC BY-NC-SA 4.0)

~·~·~·~·~·~·

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

அட்டைப்படங்கள் உதவி:
மலையக காமன்கூத்து – உதவி: அருணாசலம் லெட்சுமணன்

இணையதள முகவரி: https://tamilheritage.org

தமிழ் மரபுத் திணை இதழுக்குத் **தங்களுடைய படைப்புகளை** அனுப்ப விரும்புபவர்கள் தங்களுடைய வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை
editorthfjournal@gmail.com
என்ற **மின்னஞ்சல் முகவரி**க்கு அனுப்பி வைக்கலாம்.

உள்ளடக்கம்

தலையங்கம்.....7

சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்!.....10

1. தமிழர் செல்வம்: சர் ஏ. டி. பன்னீர்செல்வம்.....13

2. மகளிர் தினம் – காலமும் கருத்தும்.....22

3. மகளிர் தின நல்வாழ்த்துக்கள்!.....38

4. சங்ககாலக் காதலன்.....41

5. அறவியல் நோக்கில் வள்ளுவமும் மேகலையும்.....45

6. மலையக மக்களின் அடையாளமான காமன்கூத்தின் நூறாவது வருட அரங்கேற்றம். 62

7. தனித்தமிழின் தேவை: ஒரு பார்வை.....75

8. இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்.....80

9. வாழும் மூதாதையர்கள் – நூல் அறிமுகம்.....86

10. ராமானுஜரின் மேல்கோட்டைப் பயணம்.....91

11. தியாசஸின் வீடு – போம்பேயி.....99

12. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்.....101

க. எத்திராஜ் மகளிர் கல்லூரியில் பயிலரங்கம் 101

உ. புனித ரமலான் மரபு நடை.....104

13. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்..106

க. இணையவழி இலக்கியக்கூடல் நேரலைகள்.....106

உ. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்.107

ங. சுவலி — ஒலிநூல்கள்.....108

ச. புகழ் அஞ்சலி.....110

தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

அமெரிக்கா–இஸ்ரேல் நாடுகள் ஈரானுடன் போரைத் தொடங்கி உலகளவில் பெரும் பொருளாதாரச் சேதத்தை உருவாக்கி இருக்கும் காலகட்டம் இது. காலத்துக்குக் காலம் மனித குலம் போர் நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றது வெவ்வேறு காரணங்களுக்காக. போரில் கிட்டுகின்ற வெற்றி என்பது என்றுமே முழுமையான ஒரு வெற்றியாகாது. ஏனெனில் கொல்லப்படும் உயிர்கள் ஒருபுறம். நாடுகளின் பொருளாதார வளம் பாதிக்கப்படுவது ஒரு புறம்.

இவற்றோடு அந்நாட்டின் வரலாற்றுச் சின்னங்களும் பல்வேறு முக்கிய ஆவணங்களும் அழிக்கப்படுவதும் போரினால் நிகழ்வது தவிர்க்க முடியாதது. போரில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு நாடுகளும் இத்தகைய சேதத்தை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

தமிழ்நாடு பல போர்களைக் கடந்த 2500 ஆண்டுகள் கால வாக்கில் கண்டிருக்கின்றது. கல்வெட்டுகளும் ஏனைய பல ஆவணங்களும் நமக்கு இவை பற்றிய செய்திகளை வழங்கிச் சென்றிருக்கின்றன.

போரில் வெற்றி பெறும் மன்னன் தான் தோற்கடித்த மன்னனின் போர்படைகளைத் தங்கள் நாட்டிற்கு அடிமையாக கொண்டு வரும் வழக்கம் காலம் காலமாக இருந்திருக்கின்றது. தன் நாட்டின் வளத்தை பெருக்க அணை கட்டுவதற்கும் கோயில்களையும் மண்டபங்களையும் கட்டுவதற்கு இத்தகைய சிறைபிடிக்கப்பட்ட போர் அடிமைகள் முக்கிய உடல் உழைப்பை வழங்கி இருக்கின்றனர். நாம் இன்று காண்கின்ற தொன்மையான பல வரலாற்றுச் சின்னங்களும் பெரும் கோயில்களும் இத்தகைய தோல்வி கண்ட எதிரிப்படை

அடிமைகளால் எழுப்பப்பட்டவை என்பதை வரலாறு நமக்குக் காட்டுகிறது.

மனிதகுலம் நாகரிகம் பெற்று வளர்ச்சி காணும் பொழுது மனித குலத்திற்கு நாசம் விளைவிக்கும் போர்களை வெற்றிக்கான ஓர் கருவியாக எடுத்துக் கொள்ளாமல் பேச்சு வார்த்தைகளின் வழியாக தங்களது முரண்பாடுகளுக்கு ஒரு தீர்வைக் காண முயற்சியை மேற்கொள்வது தான் அறிவார்ந்த ஒரு முறையாக அமையும். அதனை நோக்கி செல்வதுதான் உலக அமைதிக்கும் வழி வகுக்கும்.

போர்களற்ற உலகம் வேண்டும்! அதுவே ஒட்டுமொத்த மனித குலத்திற்கு அமைதியை வழங்கும்!

அன்புடன்
முனைவர் க. சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்!

— மரிய ஜெரின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர மின்னிதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி.

எவ்வாறு முந்தைய கால வரலாற்று நிகழ்வுகள் ஒரு சமூகத்திற்கு சொல்லப்படுகிறதோ அவை சொல்லப்படும் விதத்தை வைத்து ஊகித்துவிடலாம் அச்சமூகத்தின் அறநெறி கருத்துகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்று. எந்த அளவிற்கு வரலாறானது நடுநிலைக் கண்ணோட்டத்தில் விருப்பு வெறுப்பு இல்லாமல் பார்க்க படுகிறதோ அந்த அளவிற்கு அச்சமூகத்தின் செயல்பாடுகள் பிறர் போற்றும் வகையிலும் மற்றவர்களுக்கு மிகுந்த பயன்னுள்ளதாகவும் அமையும். வரலாறு

கூறவிழையும் பாடத்தைக் கற்று நாம் முன்னேற வேண்டுமே தவிர பின்தங்கி விடக்கூடாது.

எண்ணம், சொல், செயல் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. அறிவு சொல் மற்றும் செயலை வெவ்வேறாக வெளிப்படுத்தினாலும் இறுதியில் எண்ணமே செயலாக வெளிப்படும். எதைப் படித்தாலும் அவற்றின் வழி உணரப்படும் உயர்ந்த எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதென்பது ஒரு சிறந்த கற்கும் திறன் மற்றும் ஆற்றல். காலச்சூழலுக்கேற்ப எது சரி எது தவறு என்று அடையாளம் கண்டு முன்னேற மனதளவில் நம்மை நாம் புதிப்பித்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உருவாக வேண்டும். அவ்வகையில் சித்திரைத் திருநாள் தமிழர்களுக்கு புத்துணர்ச்சியை ஊட்டும் என்று நம்புகிறேன். அனைவருக்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்!

இவ்விதழில் மின்தமிழ் கூகுள் குழுமத்தில் வெளியான கட்டுரை பதிவுகள் பல இடம்பெற்றுள்ளன. இதழின் அட்டைப்படமும் அவ்வாறு வெளியான ஒரு சிறந்த கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்களால் எழுதப்பட்ட

படைப்புகளைத் தாங்கியும் தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்ச்சிகள், செயல்பாடுகள், நூல்கள், ஆகிய பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய வகையிலும் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது. அனைவரும் வாசித்து பயன்பெறுக! நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

1. தமிழர் செல்வம்: சர் ஏ. டி. பன்னீர்செல்வம்

— சேலம் வரலாற்று ஆய்வு மையம்

மார்ச் 1,
வரலாற்றில் இன்று.

தமிழர் தளபதி ஏ.டி.பன்னீர்செல்வம் நினைவு தினம் இன்று.

திருவாரூர் அருகேயுள்ள பெரும்பண்ணையூரில் செல்வபுரத்தில் தாமரைச்செல்வன் — ரத்தினம்மாள் தம்பதியரின் மூன்றாவது மகனாக

பிறந்தவர் பன்னீர்செல்வம். தந்தையின் உடல்நலக்குறைவால் படிப்பைத் தொடர முடியாமல் ரயில்வேயில் அலுவலக கிளர்க்காக பணியில் சேர்ந்தார். பின்னாளில் அந்த வேலையை விட்டு விவசாயம் செய்தார்.

பள்ளிப் படிப்பை முடித்ததும் பொன்னுபாப்பம்மாள் என்பவரை திருமணம் செய்துக்கொண்டார். அதன்பின், மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிப்பை தொடர்ந்தவர் இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். 1912 ஜனவரி மாதம் பட்டம் பெற்றுக்கொண்டு வழக்கறிஞராக சென்னை மாகாணத்துக்கு வந்தவர், சென்னை மாகாண உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தன்னை பதிவு செய்துக்கொண்டார். தஞ்சையில் வழக்கறிஞராகத் தொடர்ந்து தொழில் நடத்தினார்.

1916ல் நீதிக்கட்சி தொடங்கப்பட்டபோது, அதில் இணைந்து செயல்படத் துவங்கினார் பன்னீர்செல்வம். தஞ்சை நகராட்சி தலைவர் தான் அவர் வகித்த முதல் பதவி. தஞ்சை ஜில்லா போர்டு தலைவர், அதன்பின் சென்னை மாகாண

சட்டமன்ற உறுப்பினர், நிதி மற்றும் உள்துறை அமைச்சர், கவர்னரின் ஆலோசனைக்குழு உறுப்பினர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எனப் பல பதவிகளை வகித்தார்.

1929 ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது மாகாணச் சுயமரியாதை மாநாட்டில் இளைஞர் அரங்கத்திற்குப் பன்னீர்செல்வம் தலைமை தாங்கி உரையாற்றினார்.

1930 இல் லண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேஜை மாநாட்டில் நீதிக்கட்சியின் சார்பில் கலந்து கொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மற்றும் தனித்தொகுதி கேட்டு உரையாற்றினார். 1931 இல் நடைபெற்ற இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார். 1937 இல் காங்கிரசுக் கட்சி ஆட்சியின் போது சட்டமன்ற எதிர் கட்சித் தலைவராகச் செயல்பட்டார்.

சர் ஏ.டி.பன்னீர்செல்வம் தமிழ்வேள் உமா மகேசுவரனுடன் இணைந்து தஞ்சை மாவட்டத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இவர்கள் இருவரும் "தஞ்சை

இரட்டையர்" என்ற பெயரில் நீதிக்கட்சிக்காகப் பாடுபட்டனர்.

1938 இந்தி எதிர்ப்புப் போர் உச்சத்தை எட்டிய காலம். திருச்சியில் இருந்து மணவை ரெ. திருமலைசாமி தலைமையில் தமிழர் பெரும்படை என்ற பெயரில் சென்னைக்கு நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பயணத்தின் முடிவில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்ற அரசியல் முழக்கத்தை தந்தை பெரியார் முன்வைத்தார். இந்த முழக்கமே திராவிட நாடாக உருவெடுத்தது.

திராவிட நாடு கோரிக்கை உச்சகட்டமான நேரத்தில் 2ஆவது உலகப் போர் தொடங்குகிறது. அப்போது அமைக்கப்பட்ட போர்க்கால அமைச்சரவையில் இந்திய விவகாரங்களுக்கான அமைச்சரின் செயலராக சர் ஏ.டி. பன்னீர்செல்வம் நியமிக்கப்பட்டிருந்தார். இந்தியர் ஒருவருக்கு இப்பதவி வழங்கப்பட்டதும் அதுதான் முதல் முறை.

அவரது ஆற்றலைப் பார்த்துதான் அன்றைய இங்கிலாந்து அரசு பதவி கொடுத்தது. சர் ஏ.டி. பன்னீர்செல்வம் லண்டன் சென்று பேச்சுவார்த்தை நடத்தினால் திராவிட நாட்டை வாங்கிவிடலாம் என உற்சாகத்தில் இருந்தனர் நீதிக்கட்சி தலைவர்கள். சர் ஏ.டி. பன்னீர்செல்வம் புறப்படும் நாளும் வந்தது. அப்போது அவரை உற்சாகத்துடன் நீதிக்கட்சி தலைவர்கள் வழியனுப்பி வைத்தனர்.

பதவியேற்பு நிகழ்வுக்காக இங்கிலாந்துக்கு இராணுவ அதிகாரிகளுடன் இராணுவ விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். விமானக் கட்டணம், செலவுக்கு கூட பணம்மில்லாததால் 3 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிச்சென்றார்.

1.3.1940 அன்று ஹனிபல் விமான பயணத்தில் ஏமன் வளைகுடா பகுதியில் ஏற்பட்ட விபத்தில், விமானம் மர்மமான முறையில் விபத்துக்குள்ளாகி அகால மரணம் அடைகிறார் பன்னீர்செல்வம். அப்போது அவரது வயது 52 தான்.

அன்று ஏ.டி. பன்னீர்செல்வம் மட்டும் லண்டன் சென்று பணியில் சேர்ந்திருந்தால் திராவிட நாடு கிடைத்திருக்கும்... ஏ.டி. பன்னீர்செல்வம்

இறந்துவிட்டதாக இங்கிலாந்து அரசு அறிவித்தபோது தந்தை பெரியார் துடிதுடித்துப் போனார்.

பெரியாரின் துயரம் எனும் தலைப்பில் குடிஅரசில் வெளிவந்த காலம் சென்ற பன்னீர்செல்வமே! காலம் சென்றுவிட்டாயா? நிஜமாகவா? கனவா? — தமிழர் சாந்தி பெறுவாராக! என்ற தலைப்பிட்டு அப்போது பெரியார் எழுதிய இரங்கல் வரலாற்று சிறப்புமிக்க ஒன்று.

“அந்த இரங்கலில், என் மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை; ஒரு பொட்டு கண்ணீர் வடிக்கவில்லை. என் தாயார் இறந்தபோதும் இயற்கை தானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா, இது பேராசை அல்லவா என்று கருதினேன். 10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பி படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன் படித்துவிட்டு இந்தியா வந்து சேர்ந்து சரியாக 20 வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை. பன்னீர்செல்வத்தின் மறைவு மனதை வாட்டுகிறது. தமிழர்களைக் காணுந்தோறும் காணுந்தோறும் தமிழர்

நிலையை எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கின்றது.”

தஞ்சையை ஆண்ட அரசர் பரம்பரையினரால் அமைக்கப்பட்ட திருவையாறு கல்லூரியில் "சமற்கிருதம்" மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. அதனை மாற்றி அங்குத் தமிழும் பயிற்றுவிக்கப்படும் நிலையைப் பன்னீர்செல்வம் உருவாக்கினார். மேலும் "சமற்கிருதக் கல்லூரி" என்று இருந்த பெயரை "அரசர் கல்லூரி" என்றும் பெயர் மாற்றினார்.

1937ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அருகிலுள்ள நீடாமங்கலத்தில் காங்கிரசு மாநாடு நடந்தது. மதிய உணவு வேளையில் 17 தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் பிற சாதியினருடன் அமர்ந்து உணவு அருந்தியது கண்டு உயர் சாதியினர் அவர்களை வெளியே இழுத்து வந்து, அடித்து, மொட்டை அடித்து, கழுதை மேலே ஏற்றி ஊர்வ லமாக நடத்தினர். அவர்கள் செய்தது பிறருடன் சேர்ந்து சமமாக உணவருந்தியதுதான்.

விடுதலை ஏட்டில் தந்தை பெரியார் அந்த நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்து

எழுதினார். எழுதிய விடுதலை மீது அவதூறு வழக்கு போடப்பட்டது. அந்த சமயம் விடுதலையின் நிலை சார்பாக வாதாடி வெற்றி கண்டவர் சர் ஏ.டி.பன்னீர்செல்வம் ஆவார். சாதியின் கொடுமை அந்நாளில் நிலவிய விவரம் அது. அத்தகைய சாதிக் கொடுமையைப் போக்க தந்தை பெரியாருக்குத் துணையாக இருந்த தளபதிகளில் முதன்மையானவர் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்.

ஒரு முக்கிய கவிதையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தலைவா என்று அழைத்து விட்டால் சிலரின் தலை துள்ளிப்போகும் இந் நாளில் தாழை மட்டை, முருங்கை மிளார், பேயத் திக் கொம்பு இவையெல்லாம் தான் தலைவன், தன் தலைவன் என்று தலைதுள்ளிப் போகும் இந்நாளில் பன்னீர்செல்வம் அவன் தோளுக்கு இட்டமலர் மாலை தன்னை தன் தலைவன் (பெரியார்) தாளுக்கு இட்ட பெரியோன் என்று சிறப்புற எழுதிப் பாராட்டினார்!

தஞ்சை ஆதி திராவிடர் மாணவர்களின் நலன்காக்க அவர்களுக்கு "உணவு விடுதி" ஒன்றை ஏற்படுத்தி அந்த வகுப்பு மாணவர்கள் கல்வி உயர்வுக்குப் பாடுபட்டார். தஞ்சை மாவட்ட

கூட்டுறவு வங்கித் தலைவராகவும் அவர் சில காலம் பணியாற்றினார்.

சர் ஏ.டி.பன்னீர்செல்வத்தின் மறைவு, தமிழர்களுக்கும் நீதிகட்சியினர்களுக்கும் பெரியார் அவர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாக அமைந்தது.

நன்றி: சேலம் வரலாற்று ஆய்வு மையம்

2. மகளிர் தினம் – காலமும் கருத்தும்

— யாழ்க்கோ

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்.

என்று ஆணித்தரமாகப் பாடிய மகாகவி பாரதியின் சிந்தனையை நினைவூட்டி, பெண்ணியம் போற்றி, பெண்ணியம் பேசுவோம். ஐநா சபை 1975 ஆம் ஆண்டு மார்ச் எட்டாம் தேதியை உலக மகளிர் தினமாக அறிவித்தது. அத்துடன் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேசப் பெண்கள் தினத்திற்கு ஒரு முழக்கத்தையும் முன்வைத்து வருகிறது. அதன்படி 2026 ஆம் ஆண்டிற்கான உலக மகளிர் தினத்திற்கு ஐ.நா சபையின் முழக்கமாக இருப்பது, "Rights, Justice, Action for All Women and Girls" (பாலினச் சமத்துவத்தை நிலைநாட்டவும், பாகுபாடான சட்டங்களை நீக்கவும், கட்டமைப்பு ரீதியான தடைகளை உடைக்கவும் இந்த முழக்கத்தை ஐ.நா சபை இவ்வாண்டு வலியுறுத்துகிறது.)

பாலினச் சமத்துவத்தை நோக்கி நாம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டி இருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு நாளும் இதுதான். பெண்களுக்கு, ஒரு காலத்தில் வாக்களிக்க உரிமை இல்லை; இன்று நாடுகளையே வழி நடத்துகின்றனர்; வேலை செய்யக் கட்டுப்பாடுகள் இருந்தன; இன்று பல நிறுவனங்களையே நடத்திவருகிறார்கள். பண்டைய காலத்தில் போற்றப்பட்ட பெண்கள் இடைக்காலத்தில் பழிக்கப்பட்டனர். அயலார் ஊடுருவியபோது பெண்களின் மீதான அடிமைப் போக்கும் மெல்ல மெல்ல ஊடுருவியது. பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் கற்கும் உரிமையும், கவி பாடும் உரிமையும், காதல் உரிமையும், காதல் களவு உரிமையும் காதலனை இடித்துரைக்கும் உரிமையும், அரசுக்கு அறிவுரை கூறும் உரிமையும், தலைமைத்துவ உரிமையும், தூது உரிமையும் பெற்றிருந்தனர் என்பதற்கு நம் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

தனது அரண்மனைக்கு ஔவையார் வருவதை அறிந்த அதியமான் தன் கோட்டை வாசலில் சென்று ஔவையாரை வரவேற்றுள்ளான்.

பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கியதையும், அவர்கள் சிறப்பிக்கப்பட்டதையும் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்களிலிருந்து நாம் அறிய முடிகிறது.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்–
மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

என்று பாடிய ஔவையார், தான் பாடியது போலவே சென்ற இடங்களிலெல்லாம் பெற்ற பெருஞ்சிறப்பையும் வரவேற்று வரிசை செய்ததையும்,

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரி அன்று ஈந்த களைக்கொட்டும் – சேரமான்
வாராயோ என்று அழைத்த வாய்மையும் இம்
மூன்றும்
நீலச் சிற்றாடைக்கு நேர்.

என்ற பாடலில் உறுதிப்படுத்துகிறார்; பெண்மை போற்றப்பட்டதில் பெருமை கொள்கிறார்.

ஒரு குடும்பத் தலைவி முந்தைய நாள் போருக்குத் தன் தந்தையை அனுப்பினாள், தன் தந்தை யானைகளைக் கொன்றுவிட்டு அந்தப் போரில் வெற்றி பெற்று தானும் இறந்து போகிறான். நிகழ் நாள் போருக்கு அப்பெண் தன் கணவனை அனுப்புகிறாள். தன் கணவன் போரில் வெற்றி பெற்று, எதிரிகளால் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டுக் கொடுத்துவிட்டு போர்க்களத்தில் அவனும் இறந்து போகிறான். மறுநாள் போருக்குத் தன்னுடைய பதின்பருவ மகனை அழைக்கிறாள்; அவன் தலையில் எண்ணெய் தேய்த்து அவனுக்குக் குடுமியைப் போட்டுவிட்டு போருக்குச் செல் என்று கையில் வேலை கொடுத்து அனுப்புகிறாள். சங்க காலத்தில் பெண்கள் எவ்வளவு வலிமை உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஒக்கூர் மாசாத்தியாரின் பாடல் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்; தெளிவு பெறலாம்.

பிசிராந்தையார் தன்னுடைய மனைவியை, மாண்புமிகு மனைவி, மாட்சிமை பொருந்திய மனைவி என்று அழைப்பதிலிருந்து தமிழன் பெண்ணியத்தைப் போற்றியதையும் பெண்களை மரியாதையாக நடத்தியதையும் புறநானூற்றுப்

பாடல் நமக்குப் புரிய வைக்கிறது; நம் விழிகளை விரிய வைக்கிறது.

அறிவுசான்ற இளம் பெண்ணை "சிறுமுதுக் குறைவி" என்று குறிப்பிடுவதை அகநானூற்றுப் பாடலிலும், இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்திலும், திருத்தக்கத் தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியிலும் (பாடல் 1051) காணமுடிகிறது. தலைவி தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிடுகிறாள். இதனை அறிந்த செவிலித்தாய் ஏங்கிப் புலம்பும் பாடலில் "சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி" (அகநானூறு 17, பாடியவர் கயமனார்) என்று தான் வளர்த்த, பருவத்தாலும் உருவத்தாலும் சிறிய அறிவுசான்ற மகளை எண்ணிப் புலம்புகிறாள். "சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்" (சிலப்பதிகாரம் 16: 67–68) என்ற அடியானது சிலப்பதிகாரத்தில் கோவலன் கூற்றாக அமைந்துள்ளது. சிறிய வயதிலேயே சிறந்த அறிவைப் பெற்றவளாக விளங்கியவள் கண்ணகி என்பதைக் கோவலனின் இக்கூற்றிலிருந்து நாம் அறிய முடிகிறது.

இப்படி உயிராய் உயர்வாய் போற்றப்பட்ட பெண் சமூகம் இடைக்காலத்தில் முடக்கப்பட்டன;

அடிமைச் சேற்றில் விழுந்து தவித்தன. அப்போதுதான் சில பேராண்மையாளர்கள் நாட்டில் தோன்றினர். பெண்களின் கையில் கல்வி என்னும் அறிவுக் கோலைத் தந்தனர். அந்த ஊன்றுகோல் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வந்தனர்; வருகின்றனர்; வருவர் என்பதில் ஐயமில்லை. பெண்களின் உயர்வுக்காக நீள நினைந்து தன் வாழ்நாளை ஒதுக்கிய சில நல்ல உள்ளங்களையும் நாம் இன்றைய தினத்தில் நினைவு கூற வேண்டும்.

சாவித்திரிபாய் பூலே திருமணம் செய்து கொண்ட பிறகு தன்னுடைய கணவரின் உதவியால் நான்கு ஆண்டுகள் பள்ளிப் படிப்பைப் படித்தார். சாவித்திரிபாய் பூலே தன்னுடைய கணவரின் உதவியால் படித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்த புலேவின் குடும்பத்தினர் சாவித்திரியையும் அவரது கணவரையும் வீட்டை விட்டு வெளியேற்றுகின்றனர். இருவரும் தங்களுடைய நண்பர்கள் உதவியோடு வெளியில் தங்கி, தொடர்ந்து சாவித்திரிபாய் பள்ளிப் படிப்பை முடித்து, கல்லூரிப் படிப்பையும் முடித்து, இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் என்ற பட்டத்தைப் பெற்றார். அதன் பிறகு மகாராஷ்டிரா மாநிலத்தில் பள்ளிக்கூடம்

ஆரம்பித்து அந்த பள்ளிக்கூடத்தில் ஏழைப் பெண்கள், நடுத்தரப் பெண்கள், கணவர்களால் கைவிடப்பட்ட பெண்கள் அனைவரையும் பள்ளிக்கூடம் அழைத்து வந்து அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். இதில் சாவித்திரிக்குப் பல எதிர்ப்புகள் வந்தன. பெண்களுக்குக் கல்வி கற்பிக்கக் கூடாது, பள்ளிக்கூடம் திறக்கக் கூடாது என்று சாவித்திரிபாயை ஆணாதிக்க வர்க்கத்தினர் கடுமையாக எதிர்த்தனர்; கல்லால் அடித்தனர்; சாணத்தால் எறிந்தனர்; மனிதக் கழிவுகளைக்கொண்டும் எறிந்தனர். என்றாலும் சாவித்திரிபாய் சற்றும் மனம் தளராது பெண்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதில் முனைப்போடு செயல்பட்டார். தடைகள் அனைத்தையும் கடந்து பல பெண்களைக் கல்வியில் முன்னேற்றிக் காட்டினார். இது தவிர இலவச மருத்துவச் சேவையும் மக்களுக்குக் கிடைக்கும் படி செய்தார். பிளேக் நோய் பரவியபோது பலரை மருத்துவமனையில் சேர்த்து, அவர்களுக்கு இலவசச் சிகிச்சை அளித்துக் காப்பாற்றினார். கடைசியாக கங்காராம் என்பவரைத் தூக்கி வந்து, மருத்துவமனையில் சேர்த்து அவருக்குச் சிகிச்சை அளித்தார். சிகிச்சை பெற்ற கங்காராம்

பிழைத்துக் கொண்டார். அவரால் பிளேக் நோய்த் தொற்று சாவித்திரிபாய் பூலேவிற்கும் பரவியது. இந்நிகழ்வில், சாவித்திரிபாய் பூலே இறந்துவிட்டார். சாவித்திரிபாய் பள்ளிக்கூடம் கட்டும்போது அதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தவர்தான் இந்த கங்காராம். தடைகள் அனைத்தையும் படிக்கட்டுகளாக்கி, பெண்களின் முன்னேற்றத்திற்காகப் போராடிய சாவித்திரிபாய் பூலேவை நாம் இந்த நேரத்திலே நினைவு கூற வேண்டும்.

“நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்ப செயல்” என்று கூறிய வள்ளுவரின் இலக்கணத்தைத் தொகுத்து வகுத்து விரித்து விளக்கிச் சிந்தித்தவர் மயூரம் வேதநாயகம் பிள்ளை. வேதநாயகம் பிள்ளை பெண்களிடம் உள்ள அறியாமை என்னும் நோயைக் கண்டறிந்தார். அந்த நோய் உண்டாகக் காரணமானவர்கள் ஆண்கள் தான் என்பதை உணர்ந்தார். அந்த நோய் முற்றி பெண்கள் அழிவதற்குள் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆவேசம் கொண்டார். பெண் கல்வி என்ற அருமருந்தைப் பெண் உலகிற்கு வழங்கினார். அந்த மருந்தின் விளைவு தான் இன்று தமிழகத்தில் பல பெண்கள் ஆளுமையில் சிறந்து

விளங்கி இருக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

சமுதாய வளர்ச்சிக்கு ஆண் பெண் இருவரின் குணங்களும் சமமாக இருக்க வேண்டும். சமமாக இருக்க இயற்கையில் இடம் இருக்கிறது. அது செயற்கையால் ஆண்களின் சுயநலத்தால் சூழ்ச்சியால் மறுக்கப்பட்டு வருகிறது என்றார் தந்தை பெரியார். இரண்டு மாறுபட்டவை இணைந்தது தானே உலகம். நீர் – நெருப்பு, பகல் – இரவு, உயிருள்ளவை – உயிரற்றவை, வெற்றி – தோல்வி, இன்பம் – துன்பம், அப்படி இருக்கும் போது ஆண் பெண் இருவரும் சமமாக இணைந்தது தானே சமுதாயம் என்பதை மக்களுக்குப் புரிய வைத்தார்; மடமைத்தனத்தை அகற்றச் செய்தார். பெண்கள் அடிமைத் தளைகளை உடைத்து எறிந்து உரிமை வாழ்வு வாழ அவர்களை ஊக்கப்படுத்தினார்; வளமான வாழ்வுக்கு வழி அமைத்துக் கொடுத்தார்.

இப்படி பெண்மையின் பேராற்றலைப் புரிய வைத்த மயூரம் வேதநாயகம் பிள்ளை, தந்தை பெரியார், பாரதியார், பாரதிதாசன், திரு வி.க. போன்ற பேராண்மையாளர்களின் சிந்தனையால் உருவான பெண்களின் தலைமைப் பண்பையும்

நாம் இந்நேரத்திலே நினைவு கொள்ள வேண்டியது அவசியமான ஒன்று. நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் உயர் நீதிமன்றத்தின் ஐந்தாவது பெண் நீதிபதியாக நியமிக்கப்பட்டவர். சமூக சமத்துவத்திற்கு குரல் கொடுத்த சிறந்த ஆளுமைப் பெண்மணி. இந்தியாவில் புற்றுநோய் மருத்துவத்திற்கான மருந்து குறைந்த விலையில் அனைவருக்கும் கிடைக்கிறது என்றால், அதற்கு அவர் வழங்கிய தீர்ப்பே காரணம். மதுரை யானைமலையைக் குடைந்து கிரானைட் கல் எடுக்கக்கூடாது என்று பெண்கள் போராட்டம் நடத்தினர். அந்த வழக்கு இவரிடம் விசாரணைக்கு வந்தது. அவ்வழக்கில் யானைமலையிலிருந்து ஒரு கல்லைக் கூட எடுக்கக் கூடாது எனத் தடை விதித்தவரும் இவரே. இவரது தீர்ப்பால் தான் யானைமலை இன்றுவரை எழில் மிகு தோற்றத்துடன் மதுரையை அலங்கரிக்கிறது.

இளமையில் மலை ஏற்றப் பயிற்சியை முடித்தவர் அமுதா இ.ஆ.ப. கல்லூரிப் படிப்பில் 15 பிரிவுகளில் தங்கப்பதக்கம் வென்றவர். இந்தியக் குடிமைப் பணித்தேர்வில் தேர்ச்சி பெற்று, மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றபின், செங்கல்பட்டு பாலாற்றில் இரவு நேரங்களில்

நடக்கும் மணல் திருட்டை முற்றிலுமாக தடுத்தவர். இவருக்குத் தேர்தல் பணி கொடுக்கப்பட்டபோது நடிகர்கள் சூர்யா, கார்த்திக்கை வைத்து 'வாக்கு என்பது உங்கள் உரிமை. அதை விற்பது பெரும் குற்றம்" என்று தேர்தல் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களை விழிப்படையச் செய்தார். அப்துல் கலாம், ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் இறுதிச்சடங்கை அரசு முறைப்படி நடத்தியவரும் இவரே. விளையாட்டோ, படிப்போ, செயல்பாடுகளோ எதுவாக இருந்தாலும் முழு ஈடுபாட்டோடு செய்தால் வெற்றியை வசப்படுத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டியவர் அமுதா இ.ஆ.ப.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த ரிதமிகா என்ற ஆறு வயதேயான சிறுமி தன் பெற்றோருடன் துபாயில் வசித்து வருகிறாள். இவள் 9 நிமிடங்களில் 1 முதல் 10 ஆம் வாய்பாடு வரை எழுதிக்கொண்டே 100 திருக்குறளையும் கூறி "கலாம் புக் ஆஃப் ரெக்கார்ட்" அருஞ்செயல் புத்தகத்தில் இடம் பெற்றாள். "இந்தியாவின் நடமாடும் கணினி" என்று போற்றப்படுகிறார் பிரியன்ஷி சோமானி. ஆண்டுதோறும் கணித நுண்ணறிவுத் திறன் போட்டிகள் பல்வேறு

நாடுகளில் நடத்தப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டுக்கான "மெண்டல் கால்கலேஷன் உலகக் கோப்பை போட்டி" ஜெர்மனியில் நடைபெற்றது. ஏறத்தாழ 16 நாடுகளிலிருந்து 37 கணித வல்லுநர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர். இதில் முதலிடம் பெற்றவர் 12 வயது நிரம்பிய பிரியன்ஷி சோமானி.

போரினால் உண்டாகும் அவலங்களையும், பதின் பருவத்தினரின் ஏக்கங்களையும், இழந்த வெளியுலக வாழ்வையும், ஏமாற்றங்களையும், நிறைவேறாத ஆசைகளையும் நாட்குறிப்பில் எழுதிவைத்து தன வலிகள் அனைத்தையும் வரிகளாய் விட்டுச் சென்றாள்; நம்மை விம்ம வைத்துவிட்டுச் சென்றாள் 13 வயது சிறுமி ஆன் ஃபிராங்க். அமெரிக்காவிற்கும் ரசியாவிற்கும் எப்போது வேண்டுமானாலும் அணு ஆயுதப் போர் நிகழலாம் என்று இருந்த சூழலில், இளம் அமைதித் தூதராகச் சென்று போர் ஏற்படாமல் தடுத்தவர் 13 வயதுடைய சிறுமி சமந்தா. பேரறிவு பெற்ற பெண்களும் சிறுமிகளும் நாட்டையும் நம்மையும் வழிநடத்தி நன்மை பல புரிந்து வருகின்றனர்.

பல்வேறு துறைகளிலும் மகளிர் முன்னேற்றம் அடையப் பெற்றாலும் ஏற்றத்தாழ்வுகள் தலைமைத்துவத்திலும், பொருளாதார இடங்களிலும், சமப் பங்களிப்புப் பெற வேண்டிய இடங்களிலும் இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. முதல் ஒலிம்பிக் போட்டி 1896 இல் ஏதேன்ஸ் நகர் கிரேக்கத்தில் நடைபெற்றது. அப்போட்டியில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. இரண்டாவது ஒலிம்பிக் 1900 இல் பாரிஸில் நடைபெற்றது. அப்போட்டியில் முதல் முறையாகப் பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். 24 நாடுகளைச் சேர்ந்த 997 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட வீராங்கனைகளின் எண்ணிக்கை 22 பேர் மட்டுமே. கலந்து கொண்ட வீராங்கனைகளின் சதவிகிதம் 2.2% மட்டுமே. அதே பாரிஸில் 33வது ஒலிம்பிக் போட்டி 124 ஆண்டுகளுக்குப் பிறகு 2024 இல் நடைபெற்றது. 206 நாடுகளைச் சேர்ந்த 10,500 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்துகொண்ட வீராங்கனைகளின் எண்ணிக்கை 5250. முதன் முறையாக இப்போட்டியில் பாலினச் சமத்துவம் கடைப்பிடிக்கப்பட்டது என்பதைப் பல ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டன. எனினும்

நடைபெற்ற 32 விளையாட்டுப் போட்டிகளில் 28 போட்டிகளில் மட்டுமே பாலினச் சமத்துவம் பின்பற்றப்பட்டது. மீதமுள்ள நான்கு போட்டிகளில் பாலினச் சமத்துவம் பின்பற்றப்படவில்லை. எனவே பெண்மையின் பேராற்றல் இன்னும் வெளிப்பட வேண்டி இருக்கிறது. ஆற்றல் வெளிப்பட அனைத்திலும் சம உரிமை என்பது சாத்தியமே.

பெண்கள் பாலினச் சமத்துவத்தைப் பெறவேண்டிய சரியான தருணமும் இதுவே. தமிழகத்தில் திருத்திய வாக்காளர்கள் பட்டியல் 24.02.2026 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 5,67,07,380. இதில் ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2,77,38,925, பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 2,89,60,838. ஆண்களைவிடப் பெண் வாக்காளர்கள் 12,21,913 பேர் அதிகமாக உள்ளனர் என்பதை இந்த புள்ளி விவரங்கள் நமக்குத் தெரிய வைக்கின்றன. 2026 புள்ளி விவரப்படி உலக அளவில் ஆண் பெண் விகிதம் 100 பெண்களுக்கு 101 ஆண்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் ஆண் பெண் விகிதம் 100 பெண்களுக்கு 106 ஆண்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், 60

வயதிற்கு மேல் இந்தியாவில் பெண்களே அதிக அளவில் உள்ளனர்; ஆண்கள் குறைவான விகிதத்தில் உள்ளனர். மேலும் 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்திய அளவில் ஆண்கள் 16,000 பேர் உள்ளனர் பெண்கள் 26 ஆயிரம் பேர் உள்ளனர். பெண்மையின் பேராற்றல் வெளிப்பட வேண்டிய சரியான நேரம் இது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் நம் சுய அலசலைத் தூண்டிவிடுகின்றன. சிமோன் டி போவ என்ற பிரெஞ்சு தத்துவஞானி எழுதிய தி செகண்ட் உடலுறவு என்ற புத்தகத்தில் இடம் பெற்ற ஒரு வாசகம் பெண் என்பவள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள் என்று. ஆம், பிறக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதை அந்தக் குழந்தை அறியாது. இந்தச் சமுதாயம் தான் ஒரு குழந்தை ஆணா பெண்ணா என்பதை அடையாளப்படுத்துகிறது. இதனால், சமுதாயத்தின் கண்ணோட்டத்தை மாற்ற வேண்டும் என்பதற்காகவே, இந்த ஆண்டு ஐ.நா சபை கூடுதலாக ஒரு முழக்கத்தை வைத்திருக்கிறது. 'Give to Gain' (பாலினச் சமத்துவத்தைப் பெறுவதற்காகக் கொடுப்போம்) என்ற முழக்கமாகும். வேலையில், வீட்டில், சமுதாயத்தில் பெண்களை முன்னேற்றுவதற்கு நாம் எவையெல்லாம் கொடுக்க வேண்டும்;

அறிவை கொடுங்கள், அறிமுகம் கொடுங்கள், உந்துதல் கொடுங்கள், உண்மையைக் கொடுங்கள், கடன் கொடுங்கள், குரல் கொடுங்கள், கொண்டாட்டம் கொடுங்கள், சம ஊதியம் கொடுங்கள், தலைமை கொடுங்கள், தன்னம்பிக்கை கொடுங்கள், பயிற்சி கொடுங்கள், பாதுகாப்பு கொடுங்கள், நிதி கொடுங்கள், நீதி கொடுங்கள், வளர்ச்சி கொடுங்கள், வாய்ப்பு கொடுங்கள், வளங்களைக் கொடுங்கள், அவர்களுக்கு நேரமும் கொடுங்கள்.

பெண்களால் முன்னேறக் கூடும் –– நம்
வண் தமிழ் நாடும்எந் நாடும்!
கண்களால் வழிகான முடிவதைப் போலே
கால்களால் முன்னேற முடிவதைப் போலே
பெண்களால் முன்னேறக் கூடும்!

மின்தமிழ் இணைப்பு:
https://groups.google.com/g/minTamil/c/bLQJu2TPCjI

3. மகளிர் தின நல்வாழ்த்துக்கள்!

— முனைவர் க. சுபாஷிணி

– பெண்கள் உயர் கல்வி கற்பதற்கும்
– சுயமரியாதையோடு தன் காலில் நிற்பதற்கும்
– அறிவோடு செயல்பட்டு தனக்கான
மரியாதையை நிலை நிறுத்திக் கொள்வதற்கும்
– பரந்த பார்வையோடு உலகைக் காண்பதற்கும்
– தனக்கான சுய அடையாளத்தைத்
தனித்துவத்துடன் வெளிப்படுத்திக்
கொள்வதற்கும்

ஏராளமான வாய்ப்புகள் குவிந்து கிடக்கும் காலம்
இது. ஆயினும் கூட

தங்களைப் பின்னுக்கு இழுக்கும்
– உணர்வுகளுக்கும்
– ஐயங்களுக்கும்
– அச்சங்களுக்கும்
– உறுதியற்ற தன்மைகளுக்கும்
– சமையலறையை வாழ்க்கையாக நினைக்கும்
சிந்தனைக்கும்
– சுய பச்சாதாபத்திற்கும்
– தன் மேல் நம்பிக்கை இல்லா தன்மைக்கும்

– தன்னை நம்பாமல் ஓர் ஆணை மட்டுமே முழுமையாக நம்பிக்கொண்டிருக்கும்

பெண்களுக்கு விடிவு வராது.

பெண்களே, உலகம் பல வாய்ப்புகளை நமக்கு வழங்கிக் கொண்டே இருக்கின்றது. "அவற்றை நாம் முயற்சி எடுத்து பார்க்கின்றோமா?" என்பதுதான் பெண்கள் தினமான இன்று நாம் ஒவ்வொருவரும் நம்மை கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி!

பெரும்பாலான பெண்களின் வாழ்க்கை சீரழிவதற்குக் காதல் காரணமாகின்றது. தன்னை இழந்து ஓர் ஆணை நம்பி தன் வாழ்க்கையை ஒப்படைப்பதற்கு முன் அதற்கு அந்த நபர் தகுதியானவர் தானா என்பதை ஒன்றுக்கு பலமுறை யோசித்துக் கொள்ளுங்கள். படித்த உயர் பதவியில் இருக்கும் பெண்கள் கூட திருமணம் ஆன ஆண்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதும், மற்ற பெண்ணை ஏமாற்றியவர்களைக் காதலிப்பதும் திருமணம் செய்வது கொள்வதும் அவர்கள் வாழ்க்கையை அவர்களே சீரழித்துக் கொள்வதற்குக் காரணமாகிறது.

சீராகப் பயணிக்க வேண்டிய பல பெண்களின் வாழ்க்கை திட்டமிடாத போக்கினால் சிதைந்து போகிறது.

பெண்களே..
இதுவரை இல்லை என்றாலும்
இன்று தொடங்கி
உங்கள் மேல் நம்பிக்கை வையுங்கள்.

வாசிப்பின் வழியும் பயணங்களில் வழியும், விரிவான அறிவார்ந்த நட்பு வட்டங்களின் வழியும் உங்கள் அறிவை விரிவாக்கிக் கொள்ளுங்கள்.

உணர்வுக்கு ஆட்படுவது நிம்மதியைக்
குலைக்கும்.
அறிவோடு செயல்படுவது
வாழ்க்கையை மேம்படுத்தும்!

Rights, Justice, Action. – இவ்வாண்டிற்கான பெண்கள் தின கருப்பொருள். அனைவருக்கும் பெண்கள் தின நல்வாழ்த்துக்கள்!

4. சங்ககாலக் காதலன்

— அருள் மெர்வின்

சங்க இலக்கியங்களில் ஆண்களின் ஒருதலைக்காதல் பற்றி பாடல்கள் உள்ளன. பெரும்பாலும் பெண்களை ஒருவித எமோஷனல் ப்ளாக்மெயில் செய்திருக்கிறார்கள் என்பது போலத் தோன்றும். அதற்கு ஒரு அங்கீகரிக்கப்பட்ட masochistic (வலியேற்பு வெறி) வழிமுறை இருந்திருக்கிறது. அதற்குப் பெயர் 'மடலேறுதல்'. மடல் என்றால் கடுதாசியோ, மடக்குவதோ அல்ல. மடல் என்றால் பனை மட்டை. இதன் விபரீதம் புரிய பனை மரங்களைக் கவனித்திருக்க வேண்டும்.

பனை மட்டையின் இரண்டு பக்கங்களிலும் கருக்கு இருக்கும். பல ஆண்டுகளாக பல் துலக்காமல் கருப்பாகிப் போன கூர்மையான பற்கள் போல் இருக்கும். இந்த கருக்கு மட்டையை வைத்து ஒரு இழு இழுத்தால் தோல் கிழிந்துவிடும். கிராமங்களில் வீடுகளுக்கு வேலிகளை இந்த பனை மட்டைகளால் அமைப்பார்கள். கருக்கைச் சீவி அகற்றிவிட்டு அந்த மட்டையை வைத்து மட்டைப் பந்து

என்றழைக்கப்படும் கிரிக்கெட் விளையாடுவார்கள்.

இந்த கருக்கு பரிணாமவியலில் ஆச்சரியமானது. பொதுவாக ஒல்லியாக உயரமாக கிளைகள் ஏதும் இல்லாமல் கலகலப்பு படத்தில் வரும் மறைந்த நடிகர் மனோபாலா போல வளரும் மரங்கள் பல நாம் சாப்பிட பிரோயோசனமான எந்த உணவையும் தராது. காய்ந்த ரொட்டி போல் எதையாவது காய்க்கும். எந்த உயரினமும் அவற்றைச் சாப்பிடத் தேடிச் செல்லாது. அப்படிச் செல்லாதது அந்த மரங்களின் இனப்பெருக்கத்துக்கு நல்லது. பனை மரம் வேறு வகை. காய்த்தால் நுங்கு, பழுத்தால் பனம்பழம், வடித்தால் பதநீர், நொதித்தால் கள் என்று தன் தலைப்பகுதியில் பார் வசதியுடன் கூடிய ரெஸ்டாரன்டே நடத்துகிறது. மரமேறத் தெரிந்த விலங்குகள் பனைமரமேறி ப்ரேக் ஃபாஸ்ட், லஞ்ச், டின்னர் என்று சாப்பிட ஆரம்பித்தால் பனைமரம் இனப்பெருக்கமே செய்யமுடியாது. மரமேறும் விலங்குகள் பனை மரத்தின் கொண்டைக்குள் நுழையாமல் இருக்க இயற்கை அமைத்துக் கொடுத்த ஆயுதம்தான் பனை மட்டைகளிலுள்ள கருக்கு. ஏறினால் ப்ளேடு போட்டு விடும். மனித நகங்கள் புரோட்டீனால் ஆனவை என்றால்,

பனங்கருக்கு 'லிக்னின்' எனப்படும் விநோதப் பொருளால் ஆனது. சிறு விலங்குகள் இதை ஒருவேளை கொரித்துச் சாப்பிட முயன்றாலும் அது செரிக்காது. நிலக்கரியில் இருக்கும் மூலக்கூறுகளும், பனங்கருக்கிலுள்ள லிக்னினின் மூலக்கூறுகளும் ஒரே கோஷ்டி. எல்லாம் பென்சீன் வளையங்கள். லிக்னின் பூசப்பட்ட பனைமரங்களின் மூதாதையர் மரங்கள்தான் அந்தகாலத்தில் பூமிக்குள் புதைந்து தற்போது லிக்னைட் எனப்படும் நிலக்கரியாக கிடைக்கின்றன.

இந்த பரிணாமப் பின்னணியில் சங்க கால மடலேறுதலைப் பார்த்தால் என்றால் வேறு பரிமாணம் புலப்படும். கருக்கு மட்டைகளை வைத்து குதிரை போல் ஒரு பெரிய பொம்மையைச் செய்து, அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, கருக்கு மட்டை தோலைக் கிழித்து ஊசி போல் உள்ளே இறங்க இறங்க தங்கள் ஒருதலைக் காதலை வலியுடன் ஊருக்கே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் ஆண்கள். இதற்குப் பெயர் மடலேறுதல். உண்மையிலேயே சங்ககால ஆண்கள் இப்படி ஒரு கிறுக்குத்தனத்தைச் செய்திருக்கலாம்.

அல்லது, இதை நாம் ஒரு குறியீடாக எடுத்துக் கொள்ளலாம். பனை மரத்தின் உச்சியிலுள்ள நுங்கு, பழம், பதநீர் போன்றவை ஒரு பெண்ணின் இனிய மனதாகவும், அதை எந்த மிருகமும் எளிதாக மேய்ந்துவிட முடியாதபடி அவள் போட்டு வைத்திருக்கும் மனவேலியை கருக்கு மட்டைகளாகவும் எடுத்துக் கொண்டால்... சங்ககாலக் காதலன் இந்த கருக்கு மட்டைகள் தன்னைக் கிழித்தாலும் பரவாயில்லை என்று அவள் மனதை அடைய முயன்றிருக்கிறான். மடலேறுதல் பற்றிய சங்கப் பாடல்களை வாசித்தால் அவை குறியீடுகள் போலதான் தோன்றும். மடலேறுதலை வைத்து ஆகச்சிறந்த இரண்டு உளவியல் பாடல்களை மாதங்கீரனார் எழுதியிருக்கிறார். அடுத்து இதைப் பற்றி எழுதும்போது விளக்குகிறேன். மடலேறுதலை தொல்காப்பியர் சொன்னாரென்று கைக்கிளை, பெருந்திணை என்றெல்லாம் தேவையில்லாமல் வகைப்படுத்தியிருக்கிறார்கள். பக்தி இலக்கியங்களிலும் இதையே பிடித்துக் கொண்டார்கள்.

5. அறவியல் நோக்கில் வள்ளுவமும் மேகலையும்

— முனைவர் தேமொழி

தமிழ் அறவியல் புலம் பரந்துபட்டது. மக்களுக்கு அறநெறி உரைக்க இந்திய மண்ணில் தோன்றிய சமயங்களையும், அயலகத்தில் தோன்றிய சமயங்களையும் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதால் பல சமய நெறிகளுக்கு ஆற்றுப்படுத்தும் இலக்கிய நூல்கள் தமிழில் உண்டு என்ற சிறப்பிற்கு உரியது நம் தமிழ்மொழி. அத்துடன் சமயக் கோட்பாடுகளை விமர்சிக்கும் சித்தர் பாடல்களுக்கும் தமிழில் இடமுண்டு. இத்தகைய தமிழ் அறநெறிச் சிந்தனையின் வளமான மரபில், மணிமேகலை காப்பியமும் திருக்குறளும் இரண்டு பெரும் தூண்களாகத் திகழ்கின்றன. இவ்விரண்டு படைப்புகளும் அறம், ஒழுக்கம், வாழ்வியல் நெறிமுறைகள் குறித்த ஆழமான பார்வைகளை முன்வைத்தாலும், அவற்றின் தத்துவப்பின்னணிகள் வேறுபட்டவை.

பௌத்தம் கூறும் அறம்:

அறத்தின் மையம் மனிதம், இப்பூமியில் மனிதருக்கும் மனிதச் சமூகத்துக்கும் இடையே உள்ள உறவு அன்பு என்று உரைத்த பௌத்தம்; எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஏனைய பிற உயிர்களுக்குத் தீங்கு இழைக்காமல், அவ்வுயிர்களின் துயர் களைவதே அறமாகும் என்று வரையறுத்தது. பௌத்தம் காட்டும் அறம் என்பது அன்பு, இரக்கம், அருள் ஆகிய பண்புகளின் செயல் வடிவம்.

வள்ளுவம் காட்டும் அறம்:

மக்களுக்கு அறவழி காட்ட வந்த வள்ளுவர், தன் அறவுரைகளைச் சமய எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தவில்லை. உலக உயிர்கள் எல்லாம் அறம் என்ற குடையின் கீழ் அமைபவை என்ற கொள்கையுடன் சமயங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உலகில் எவருக்கும் பொருந்தும் வண்ணம் அறவழி காட்டினார். சீத்தலைச்சாத்தனாரின் மணிமேகலை காப்பியம் முன்னிறுத்தும் பௌத்த அறநெறிக் கோட்பாடுகளையும், திருவள்ளுவர் போதிக்கும் உலகப் பொதுவான அறக் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் அறநெறிச் சிந்தனையின் இருபெரும் கிளைகளின் ஒற்றுமை, வேற்றுமை

மற்றும் அவை ஒன்றுக்கொன்று துணைநிற்கும் பாங்கினை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் மையமாகும்.

மணிமேகலை காப்பியம்:

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை, பௌத்த அறிஞரான சீத்தலைச்சாத்தனாரால் இயற்றப்பட்டது. மணிமேகலை காப்பியம், சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அமைந்திருந்தாலும், அதன் தனித்துவம் பௌத்த மெய்யியலை மையமாகக் கொண்டிருப்பதில் அடங்கியுள்ளது. உலக இன்பங்களைத் துறந்து, கருணை வழியில் பயணிக்கும் மணிமேகலை என்ற கதைநாயகியின் வழியே, பௌத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான அறம், இரக்கம், கொடை, துறவு, அருள், நிலையாமை ஆகியவற்றை இக்காப்பியம் அழுத்தமாகப் பேசுகிறது. குறிப்பாக, பசித்தவருக்கு உணவளிக்கும் அமுதசுரபி என்னும் பாத்திரம், பௌத்த அறத்தின் செயல் வடிவமாகவும் குறியீடாகவும் விளங்குகிறது. எனவே மணிமேகலை என்றால் அறம், அறிவு, துறவு ஒருங்கிணைந்த ஓர் உருவம்.

திருக்குறள்:

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், தமிழ் அறநெறி மரபில் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்று, 'உலகப் பொதுமறை' என்று போற்றப்படுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட சமயம், இனம் அல்லது காலச் சூழலுக்குள் தன்னை வரையறுத்துக் கொள்ளாமல், மானுடப் பொதுமைக்கான அறக் கோட்பாடுகளைத் திருக்குறள் முன்வைக்கிறது.

[அ] அற விழுமியங்களில் ஒற்றுமையும் வேற்றுமையும்

திருக்குறளின் உலகப் பொது நெறியும், மணிமேகலையின் பௌத்த மெய்யியலும் பல முக்கிய அற விழுமியங்களைப் பகிர்ந்து கொள்கின்றன. அன்பு, இரக்கம், நிலையாமை மற்றும் வினைப்பயன் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் காணப்படும் ஒற்றுமைகள், தமிழ் அறநெறிச் சிந்தனையின் ஆழமான பொது நீரோட்டத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த ஒப்பீட்டு ஆய்வில், திருக்குறளின் அறக்கருத்துக்கள், மணிமேகலையின் பௌத்த அறநெறிகளுடன் ஒத்திருக்கும் இடங்களிலும் நுட்பமாக வேறுபடும் இடங்களிலும் ஓர் ஒப்பீட்டு அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பெைத்த அறக் கருத்துக்களுக்கு இணையான அல்லது மாற்றான வள்ளுவரின் சிந்தனைகள், தமிழ் அறநெறி மரபின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

அறத்தின் ஆற்றல்: இரு நூல்களிலும் 'அறம்' என்ற கருத்தாக்கம்

மணிமேகலை மற்றும் திருக்குறள் ஆகிய இரு நூல்களுக்கும் 'அறம்' என்ற கருத்தாக்கமே மைய அச்சாக விளங்குகிறது. அறம் என்பது வெறும் நீதி அல்லது சட்ட விதிகளை மட்டும் குறிக்காமல், அது அடிப்படை வாழ்வியல் கொள்கையாகப் பார்க்கப்படுகிறது. இவ்விரு படைப்புகளும் அறத்தை வரையறுக்கும் விதத்தினை ஆராய்வது, அவற்றின் தத்துவ அடித்தளத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. பெைத்த மரபில் அறம் என்பது அன்பு, இரக்கம், அருள் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த வடிவமாகும். அறம் எங்கிருக்கிறதோ அங்கு அன்பு, இரக்கம் ஆகியன தாமாகவே குடிகொண்டுவிடும் என்பது பெைத்த அறத்தின் உள்ளடக்கம். அறம் என்பது விதிகளின் தொகுப்பு அல்ல; அது அனைத்து உயிர்கள் மீதும் காட்டப்படும் பேரன்பின் வழியே பற்றற்ற நிலையை அடைய உதவும் மெய்யியல் பாதையாகும். மணிமேகலையின் செயல்கள்

துறவற வாழ்க்கை ஆகிய அனைத்தும் இந்தப் பேரறத்தின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. மணிமேகலை அன்பை, அறத்தின் உள்ளார்ந்த வெளிப்பாடாகக் காண்கிறது. துறவறம், தவம் ஆகிய வழிகளைத் தேர்வு செய்து அறம் என்பதைச் செயல்படுத்துகிறது.

"மேற்றே யுலகின் மெய்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே"

[மணிமேகலை – பாத்திரம் பெற்ற காதை: 94–96]

உலகத்தின் உண்மை நெறியாகிய வாழ்க்கை, இந்த நிலவுலகில் வாழ்வோர்க்கெல்லாம் உணவினை அளித்தோரே உயிர்கொடுத்தோராவர் என்கிறது மணிமேகலையின் பெைத்தம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதைச் சங்ககாலப் புலவரான குடபுலவியனார் பாடிய புறநானூற்றுப் பாடலும் (பாடல் எண் 18) கூறும் முறைமையால் இக்கருத்தாக்கம் தமிழ் மண்ணின் பண்பாகவும் இருந்ததை அறிய முடிகிறது.

மறுபுறம், திருக்குறள், அறத்தை உலகியல் வாழ்வோடு இணைத்து, ஒரு நடைமுறை ஒழுக்கக் கோவையாக முன்வைக்கிறது.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"

(குறள்: 49)

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும் என்று இல்லறமே அறம் என்று வலியுறுத்துகிறார் வள்ளுவர். தொடர்ந்து;

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"

(குறள்: 322)

இருப்பதைப் பகிர்ந்து உண்டு, பல உயிர்களையும் பாதுகாப்பது, நூல் எழுதியவர்கள் தொகுத்த அறங்களுள் எல்லாம் முதன்மையான அறமாகும் என்று கூறும் வள்ளுவர் மணிமேகலை காட்டிய பல்லுயிர் ஓம்புவது என்கிற தலையாய அறத்தை இல்லறம் வழிச் செயல்படுத்த அறிவுறுத்துகிறார் என்பதைக் காணமுடிகிறது. திருக்குறள் துறவறம், தவம் ஆகியவற்றை விவரித்தாலும், அறத்தை இல்லற வாழ்வில்

கடைப்பிடிக்க வேண்டிய முதன்மைக் கடமையாக வரையறுக்கிறது.

அத்துடன் தீய குணங்களிலிருந்து விலகி இருப்பதே அறத்தின் அடிப்படை என்கிறார் அவர்:

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

(குறள்: 35)

பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு தீய குணங்களையும் விலக்கி வாழ்வதே அறம் என்பது இதன் பொருள். எனவே, திருக்குறள் தீயவற்றை நீக்குவதே அறத்தின் இயல்பு என ஒரு வாழ்வியல் நெறியை வரையறுப்பதுடன், இல்லறம் போற்றி அனைவருக்கும் உதவ அறிவுரை கூறுகிறது.

[ஆ] பொதுவான அற விழுமியங்கள்: அன்பும் இரக்கமும் அருளும் நன்னெறிகளும்

அன்பு, இரக்கம், நிலையாமை மற்றும் வினைப்பயன் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் ஒத்துக் காணப்படும் திருக்குறளும் மணிமேகலையும் தமிழ் அறநெறிச்

சிந்தனையின் ஆழமான பொது நீரோட்டத்தை வெளிப்படுத்துகின்றன.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு."

(குறள்: 80)

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும் என்பது இதன் பொருள். அத்துடன்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

(குறள்: 72)

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிச் செயல்படுபவர்கள் என்று அத்தகையவர்கள் பண்பையும் குறள் சுட்டுகிறது. குறளின் அதிகாரங்கள் பலவும், பெத்தப் பஞ்சசீலக் கொள்கைகளான

1. கொல்லாமை,
2. கள்ளாமை,

3. காமத்தில் தவறாமை,
4. பொய்யாமை,
5. கள் உண்ணாமை

ஆகிய ஐந்து நல்லொழுக்கக் கொள்கைகளையும்; அத்துடன் பெளத்தம் போதிக்கும் ஈகை, நிலையாமை, அவா அறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, ஊழ் போன்ற நெறிகளையும் அதிகார அளவில் விளக்கும் குறட்பாக்களைக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. அத்துடன், திருக்குறள் முன்வைக்கும் 'ஒழுக்கம்' என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் சாராத, மனிதர் அனைவருக்கும் பொதுவான ஒரு வாழ்வியல் நெறியாகும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

(குறள்: 131)

ஒழுக்கம் உயிரை விட மேலானது என்பது திருக்குறளின் துணிபு. திருக்குறளில் வலியுறுத்தப்படும் 'ஒழுக்கம்' என்பது மதம், இனம், மொழி கடந்து அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தக்கூடிய ஓர் உலகப் பொதுவான அறநெறியாகும்.

[இ] உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதுதலும் ஈகையும்

மணிமேகலையின் ஆபுத்திரன் கதை மக்களிடம் உயர்வு தாழ்வு பேசுவதை மறுப்பதற்கும், அனைத்து உயிர்களையும் கருணையுடன் போற்றவதை வலியுறுத்தவும் படைக்கப்பட்டுள்ள கதாபாத்திரம். பிறந்த பின் அனாதையாக விடப்படும் ஆபுத்திரன், பார்ப்பனர் வேள்வியில் உயிர்ப்பலியைத் தடுப்பவனாகவும், அமுதசுரபி உதவியுடன் வறியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் உணவளிக்கும் இரக்கமுள்ளவனாகவும் காட்டப்படுகிறான்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

(குறள்: 972)

எல்லா மக்களும் பிறப்பால் சமமே; அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும் என்று கூறும் குறளும்;

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

(குறள்: 259)

அவிகளைத் தீயில் போட்டு ஆயிரம் வேள்வி செய்வதைக் காட்டிலும் ஓர் உயிரைப் போக்கி அதன் உடம்பை உண்ணாமல் இருப்பது நல்லது என்று கூறும் குறளும்;

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

(குறள்: 221)

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது என்று கூறும் குறளும் அனைவரும் சமம், பிறப்பில் பேதமில்லை என்று கூறுகிறது.

மணிமேகலையின் அறவியல் கட்டமைப்பு, பௌத்தத்தின் தத்துவார்த்த இலக்கான 'நிப்பானம்' (நிர்வாணம்/முக்தி) என்ற வீடுபேற்றை அடைவதோடு பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளது. மணிமேகலை கூறும் அறங்கள் அனைத்தும் பிறவித் துன்பச் சங்கிலியை அறுக்கும் கருவிகளாகும். இதற்கு மாறாக, திருக்குறள் ஓர் உலகப் பொதுவான,

சமயச் சார்பற்ற அறவியல் அமைப்பை முன்வைக்கிறது. அதன் நோக்கம், இவ்வுலகில் ஒரு சீரான, இணக்கமான, அறம் சார்ந்த வாழ்வை வாழ்ந்து சிறப்படைவதே ஆகும்.

"நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

(குறள்: 222)

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறருக்குக் கொடுப்பதே சிறந்தது. நன்னெறி என்பதற்காக மட்டுமே அறம் செய்தல் சிறப்பாகும். மாறாக; முக்தி அடைதல், மேலுலகம் அடைதல் போன்ற நோக்கில் இல்லாமல், அதை எதிர்பார்க்காமல், பலன் எதிர் பார்க்காமல், அறவிலை வணிகம் செய்யாமல் நன்னெறி என்பதற்காகவே தேவையானவருக்கு உதவ வேண்டும் என்கிறது. இவ்வகையில், எந்த ஓர் உயிருக்கும் தீங்கு செய்யாமை, பல்லுயிர் ஓம்புதல் என்ற கொள்கையில் இவ்விரு நூல்களும் மிக வலுவாக ஒன்றிணைகின்றன. இது இவ்விரு அறவியல் மரபுகளுக்கும் இடையேயான ஒரு முக்கிய ஒற்றுமைப் புள்ளியாகும்.

மணிமேகலை, ஈகையைத் துறவறத்தின் ஒரு கடமையாகச் சித்திரிக்கிறது. திருக்குறளோ, அதை ஒரு சமூக மற்றும் தனிமனித அறமாக, ஒரு செம்மையான இல்லற வாழ்வின் இன்றியமையாத அங்கமாகக் கருதுகிறது. திருக்குறள் ஈகையை இல்லறத்தாரின் தலையாய கடமைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. துறவறம் போற்றவும் இல்லற வாழ்வினர் மேற்கொள்ளும் ஈகை உதவுகிறது என்று காட்டுகிறது.

முடிவுரை:

திருக்குறள் மணிமேகலை ஆகிய இவ்விரு நூல்களிலும் அறம் அடித்தளமாக விளங்குவதையும், அவ்வறச்சிந்தனைகளை இருவேறு கோணங்களில், ஆனால் ஒரே குறிக்கோள் நோக்கி வெளிப்படுத்துவதையும், இரு நூல்களும் அறம், அன்பு, அருள், கருணை, கொல்லாமை, நிலையாமை, ஊழ்வினை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் ஆழமான ஒற்றுமைகளைக் கொண்டுள்ளமையையும், அவை மானுட வாழ்வின் மேன்மைக்கு அறமே அடித்தளம் என்பதை ஒருமித்த குரலில் பறைசாற்றுகின்றன என்பதையும் இந்த ஒப்பீட்டு ஆய்வானது எடுத்துரைக்கிறது.

குறள் சொல்லும் சமயம் கடந்த பொது நன்னெறி கோட்பாடுகளை விளக்க, அவற்றைக் கதைவடிவில் மக்களிடம் கொண்டு செல்ல ஒரு புனைவு எழுதப்படுமானால், ஒரு பௌத்தப் படைப்பாளரின் கருத்துரிமை அடிப்படையில் உருவான காப்பியமாக, மணிமேகலையாக அது திகழ்கிறது எனலாம். "பொய்யில் புலவன் பொருள்உரை தேறாய்" (மணிமேகலை – 22; சிறைசெய் காதை) என்று சீத்தலைச் சாத்தனார் வள்ளுவரை மேற்கோள் காட்டும் வரிகள் மேகலை ஆசிரியருக்கு வள்ளுவம் கொடுத்த தாக்கத்திற்கும் சான்றாக அமைகிறது.

மணிமேகலையின் கதை வடிவ விளக்கமும், திருக்குறளின் கோட்பாட்டு விளக்கமும் ஒரே அறத்தின் இருவேறு வெளிப்பாடுகளாகும். ஆக, மணிமேகலை ஓர் ஆன்மீகத் தலைவியாக மட்டுமின்றி, சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்கிறாள். உலக இன்பங்களைத் துறந்து, ஞானத்தைத் தேடி, மனிதக்குலத்திற்குச் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் ஆழமான ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்கிறாள்.

இருப்பினும், அவற்றில் நுட்பமான சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. மணிமேகலை, பௌத்த மெய்யியலின்படி, பற்றுகளை அறுக்கும் துறவு நெறியை வீடுபேற்றுக்கான வழியாக முன்வைக்கிறது. மேலும், ஆன்மா குறித்த அதன் அனாத்மா பார்வை, இந்திய மெய்யியலின் பிற மரபுகளிலிருந்து தனித்து நிற்கிறது. மறுபுறம், திருக்குறள் இல்லறத்தை மையமாகக் கொண்ட ஓர் உலகப் பொது நெறியை வகுத்து, அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை வலியுறுத்துகிறது வையத்தில் வாழ்வாங்கு வாழ அறிவுறுத்துகிறது.

இறுதியாக, இந்த இரு பெரும் நெறிகளும் முரண்பட்டவை அல்ல, மாறாகத் தமிழ் அறநெறிச் சிந்தனையின் ஒருங்கிணைந்த பார்வையை வழங்கும் இருவேறு கிளைகள் என்பது நிறுவுகிறது. 'தமிழ் இலக்கியங்களில் பன்முகத்தன்மை' என்ற பார்வையில் மணிமேகலையில், அறம் என்பது ஆன்மிக விடுதலையை நோக்கிய ஒரு பயணம்; திருக்குறளிலோ, அறம் என்பதே மனிதராக வாழ்வதன் இலக்கணம். இந்த இரு பெரும் மரபுகளும் இணைந்து தமிழ் அறநெறிச்

சிந்தனையை வளப்படுத்தி, உலகிற்கே வழிகாட்டும் ஒருங்கிணைந்த பார்வையை வழங்குகின்றன.

சான்றாதாரங்கள்:

1. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (ஆசிரியர்), ந.மு. வேங்கடசாமிநாட்டார் (ஆசிரியர்). மணிமேகலை (மூலமும் உரையும்), கெரா பதிப்பகம், சென்னை, 2019

2. வரதராஜன்.மு, திருக்குறள் உரை விளக்கம், திருவள்ளுவர் நிலையம், திருச்சி, 1954.

————

[**நன்றி:** டோக் பெருமாட்டி கல்லூரி–மதுரை, தமிழ் உயராய்வு நடுவம் 24.02.2026 அன்று நடத்திய 'தமிழ் இலக்கியங்களில் பன்முகத்தன்மை'— என்னும் தலைப்பிலான பன்னாட்டுக் கருத்தரங்கம்]

6. மலையக மக்களின் அடையாளமான காமன்கூத்தின் நூறாவது வருட அரங்கேற்றம்

— அருணாசலம் லெட்சுமணன்

தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்து இலங்கையின் பெருந்தோட்டப் பொறிமுறையினை விருத்தி செய்வதில் இந்திய வம்சாவளி தமிழர்களின் பங்கேற்பு மிக முக்கியத்திற்குரியதாக விளங்குகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான பூர்வீகத் தொடர்பு நிலைகள் குறித்த ஆதாரங்கள் பல உள்ளன. அவ் ஆதாரங்களை முன்வைப்பதில் இராமாயணச் சித்தரிப்புக்கள் குறித்த பார்வை

மிகுந்த கவனத்தைப் பெறுகின்றன. இவ்வாறான தொடர்பு நிலைகள் பல இருந்த போதிலும் 1823ம் வருடத்தைப் பிரதானப்படுத்திய நகர்வு 'மலையகச் சமூக' உருவாக்கத்தில் மிக முக்கிய கட்டமாக அமைகிறது. அப் பிரயத்தனத்தில் 'மலையகம் – 200' என்ற கோசத்தின் பின்னணியில் இடம்பெற்ற நிகழ்வுகள் அவதானத்திற்குரியதாக அமைந்தன. இவ் இருநூறு வருடகால அவதானிப்பில் மலையக மக்களின் வரவு, வாழ்வு, புலம்பெயர்வு, இருப்பின் ஆர்வம், புலம்பெயர்வின் நிர்ப்பந்தம், பிரயோக அரசியலின் பலம் பலவீனம், கலை, பண்பாட்டு அம்சங்கள், கல்வி நிலைகள், பொருளாதார நகர்வுகள் போன்றவை பற்றிய அவதானங்களும் கவனத்தைப் பெறுகின்றன. மலையக மக்களின் இருப்பை தக்க வைப்பதிலும் அவர்களின் அடையாளத்தைப் பிரதிபலிப்பதிலும் கலைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அக் கலைகளுள் முத்தாய்ப்பாகவும், மலையகத்தின் முக்கூத்துக்களில் மூலமாகவும் அமையும் காமன்கூத்து மலையக மக்களை ஒருங்கிணைப்பதில் முக்கிய வகிபங்கை பெறுகிறது எனலாம்.

இந்திய வம்சாவளி தமிழர்களின் புலம்பெயர்வு இலங்கையின் வழிபாட்டு மரபிலும் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. பிரித்தானியக் காலனித்துவப் பொறிமுறையில் இலங்கையில் பெருந்தோட்டத்துறையை விருத்தி செய்யும் முனைப்பில் சொல்லெனா துயரங்களை அனுபவித்தவர்களாக இவர்கள் திகழ்கிறார்கள். இலங்கையில் 1823ம் வருடத்திற்கு முன்னர் வர்த்தக நோக்கம் கருதிய புலம்பெயர்வுகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான புலம்பெயர்வுகள் இலங்கையில் பூர்வீகத்தில் இருந்த முருக வழிபாட்டை மேலும் வலுப்படுத்தும் கைங்கரியத்தை ஆற்றியுள்ளது. மலையகம் உட்பட நாடு முழுவதும் செட்டிமார்களின் வர்த்தக நடவடிக்கை நோக்கம் கருதிய வரவுகளால் சத்திரங்கள் உருவெடுத்தன. பின்னர் அச்சத்திரங்கள் முருகன் ஆலயங்களாக உருவெடுத்தன. அவ்வாறான ஆலயங்களுள் நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயமும் குறிப்பிடத்தக்கதாகும்.

1823ம் வருடத்தைப் பிரதானப்படுத்திய புலம்பெயர்வானது இலங்கையில் அம்மன் வழிபாட்டை நிலைநிறுத்துவதில் பெரிதும் துணைபுரிந்துள்ளது. அதன் தொடர்ச்சி

நிலையிலேயே மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஆகியன அமையப்பெற்றமை கவனத்திற்குரியதாகும். மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் இருநூறு வருடத்தை அடையாளப்படுத்தும் வகையில் கடந்த வருடம் தபால் திணைக்களத்துடன் இணைந்து நினைவு முத்திரையை வெளியிட்டுள்ளது. ஒரு கல்வி நிறுவனம் என்ற வகையில் கினிகத்தேனைக்கு அருகிலுள்ள நகரமாக நாவலப்பிட்டி விளங்குகிறது. நாவலப்பிட்டி நகரில் அமைந்துள்ள கதிரேசன் மத்தியக் கல்லூரியும் தனது நூற்றாண்டைக் கொண்டாடிய மகிழ்வில் 'அடையாள முத்திரையை வெளியிட்டுள்ளது. மலையகம் – 200 தொடர்பில் இலங்கையும் இந்தியாவும் இரு வேறுபட்ட முத்திரைகளை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அவ் இரு நாடுகளும் வெளியிட்டுள்ள முத்திரைகள், வழமை போலவே நமது தேயிலை பறிக்கும் காட்சியை மாத்திரம் பொதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் தபால் திணைக்களத்துடன் இணைந்து தனிப்பட்ட ரீதியாக நினைவு முத்திரையினை வெளியிட்டது. 'நிகர்' அமைப்பு

வெளியிட்ட முத்திரை மலையகத்தின் வாழ்வியலையும், வரலாற்றையும், வளர்ச்சி நிலைமையினையும் எடுத்துக்காட்டும் முனைப்பில் திருப்தியை உணர்த்துவதாக அமைகிறது. அம்முத்திரை மலையக மக்களின் நேசிப்பிற்குரிய கலையான காமன்கூத்தையும் அடையாளப்படுத்தியுள்மை கவனத்திற்குரியதாகும்.

'கினிகத்தேனை' இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்பு முக்கிய தளமாகிறது. இராமாயணத்தின் சித்தரிப்பிற்கமைய அனுமனால் வைக்கப்பட்ட தீ நூராமல் எரியத் தொடங்கியது. நூரள, நூரளை என்ற பிரயோகத்தின் அடையாளமாகிப் போன பெயராக 'நுவரெலியா' அமைகிறது.

கினிகத்தேன நீர் வளமிக்க களமாகிறது. இலங்கையின் மிக நீளமான நதியும், அகலமான நதியும் இத்தளத்தின் ஊடாகவே செல்கின்றன. நீர் வளமிக்கதான நிலையில் அனுமனால் மூட்டப்பட்ட தீ இப் பகுதியில் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. தீ பரவவில்லை என்பதைச் சிங்களத்தில் 'கினி கத்த நே' எனக் கூறுவார்கள். அப் பிரயோகத்தின் அடையாளத்துடனே 'கினிகத்ஹேன' என அழைக்கப்பட்டு வந்துள்ளது. இராமாயணத்தில் தமிழ் மன்னன் இராவணனோடு தொடர்புபடும் 'இராவணன் கல்வெட்டு' தொடர்பில் பல இடங்களில் அவதானிக்கலாம். கல்வெட்டுக்களுக்கு ஏற்ற கற்களாக கிரனைட் கற்கள் விளங்குகின்றன. அவ்வகையான கற்கள் இப்பிரதேசத்திலும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. புவியியல் ரீதியான தொடர்ச்சி நிலையில் இம்புல்பிட்டி, கல்லாறு, ஹோல்கம ஆகிய பிரதேசங்களுக்கு மிக அண்மையிலே இத் தோட்டமும் காணப்படுகின்றது. குறித்த பிரதேசங்களில் கிரனைட் கற்கள் அதிகம் விளைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 'சீதை' இராமாயணத்தின் முக்கிய பாத்திரம் என்ற வகையில் இத்தோட்டமும் 'சீத்தாலெட்சுமி

தோட்டம்' என அழைக்கப்படுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

அவ்வாறே இருநூறு வருடங்களுக்கு முன்னர் இந்திய வம்சாவளி தமிழர்களின் வரவுப் பாதையின் முக்கிய அங்கமாக கினிகத்தேனையின் சுவடுகள் கவனத்திற்குரியவனாகும். மாத்தளை, கண்டி, கினிகத்தேன என்றவாறே தொப்பித்தோட்டமான அட்டன் பகுதிக்கான நடைப் பயணம் தொடர்ந்துள்ளது. அக் காலக்கட்டத்தில் இப் பாதையினூடாக பயணித்தவர்கள் கினிகத்தோனையை 'ஒத்தக்கடை' என்றே அடையாளப்படுத்தியுள்ளார்கள். கொழும்பு, கண்டி பிரதானப் பாதைகளின் கேந்திர நிலையம் என்ற வகையிலும் இந்நகரம் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையின் முக்கியத்துவம் பெற்று விளங்கும் சிவனொளிபாதமலைக்கு அண்மித்த நகரம் என்ற வகையிலும் இத்தளம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்நகரத்தின் ஊடாகவே சிவனொளிபாத மலைக்கான பயணப்பாதையும் அமைந்துள்ளது. ஒத்தக்கடை என்ற நிலையிலிருந்து மிக விரைவாக முன்னேறி வரும் நகரமாக இந்நகரத்தின் வளர்ச்சி நிலை அவதானத்திற்குரியதாகும். இந்நகரத்திற்கு

அருகில் அமைந்த தோட்டங்களில் மலையக மக்களின் வாழ்வியலை அடையாளப்படுத்தும் பிரயத்தனங்கள் முக்கியம் பெறுகின்றன. அவ்வகையில் சீத்தாலெட்சுமி தோட்டத்தின் பங்கேற்கும் (பிளக்குவாட்டர் தோட்டம்) கலை நேசிப்பும் சிறப்பிடம் பெறுகின்றன.

மலையகத்தில் பல தோட்டங்கள் நமது அடையாளமான முக்கூத்துக்களையும் வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன. சிற்சில பிரதேசங்களில் பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு ஆகிய கூத்துக்கள் பயில் நிலையிலிருந்துள்ளன. மலையகத்தின் சகல பிரதேசங்களிலும் காமன் கூத்து செல்வாக்கு பெற்றிருந்தது. கடந்த காலங்களில் வட மாகாணத்திற்கு மலையக மக்கள் புலம்பெயர்ந்த நிலையில் அப் பிரதேசத்திலும் காமன் கூத்தை நிலைபெறச் செய்திருந்தார்கள். கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் காமன் கூத்தின் பயில் நிலை குறைந்து வருகின்றமையும் கவலைக்குரியதாகும். அவ்வாறே பொன்னர் சங்கர் கூத்தை அரங்கேற்றுவதிலும் ஆர்வம் குறைந்து வருகிறது. அருச்சுனன் தபசு கூத்தை அரங்கேற்றுவது மிக அரிதாகவே இடம்பெறுவதும் கவலைக்குரியதாகும்.

இந்நிலையில் நமது பாரம்பரியத்தைக் காக்க வேண்டிய பிரயத்தனத்துடன் ஒவ்வொரு வருடமும் இக் கூத்துக்களை அரங்கேற்றப் பங்களிப்பு செய்யும் நம் மண்ணின் கலைஞர்கள் போற்றுதற்குரியவர்கள்.

கினிகத்தேனை, பிளக்குவாட்டர் தோட்டத்தில் இக் காமன்கூத்து பாரம்பரியத்தை நிலைபெறச் செய்வதில் மூத்த காமன் வாத்தியார் அமரர் இராமசாமி கோபால் அவர்களது பங்கேற்பு மிகுந்த கவனத்தைப் பெறுகிறது. மிக நீண்ட காலமாக இத் தோட்டத்தில் காமன்கூத்தை அரங்கேற்றுவதைக் கட்டாயக் கடமையாகக் கொண்டு தன் வாழ்நாளை அர்ப்பணித்த நம் மண்ணின் உயரிய கலைஞராக கோபால் ஐயா திகழ்ந்தார். மிக அமைதியான சுபாவம் கொண்டவரான கோபால் வாத்தியார் சிறந்த அணுகுமுறையில் அனைவரையும் ஒன்றிணைத்து வருடந்தோறும் காமன்கூத்தை அரங்கேற்றுவதில் பெரும் பங்காற்றி வந்துள்ளார். பிளக்குவாட்டர் தோட்டத்து பொது மக்களை, இளைஞர்களை, அண்மையத் தோட்டத்து மக்களை, அருகிலுள்ள காமன் வாத்தியார்களை, வேடதாரிகளை, பாட்டு வாத்தியார்களை, தப்பிசை கலைஞர்களை,

ஒப்பனை கலைஞர்களை ஒருங்கிணைத்து ஒவ்வொரு வருடமும் காமன் கூத்தை அரங்கேற்றும் அவரது முனைப்பு மிகுந்த அவதானத்திற்குரியதாகும். பாடல் பாடுவதிலும் சிறந்த முன் மாதிரியாக விளங்கிய அண்ணார் இக் கூத்தின் உள்ளடக்கத்தைத் தெளிவுறுத்துவதிலும் முன் மாதிரியானவராக விளங்கினார். எல்லாவற்றுக்கும் மேலாகத் தனக்குத் தெரிந்த இக் கலையம்சத்தை இளந் தலைமுறையினருக்குப் போதிப்பதிலும் இவரது முன் மாதிரி போற்றுதற்குரியதாகும். இவ்வாறான ஓர் ஆளுமையின் அமரத்துவம் இத் தோட்டத்து மக்களால் ஜீரணிக்க முடியாவதென்றாக அமைந்திருந்தது.

உதவி காமன் வாத்தியார் நல்லு மோகனதாஸ் அவர்களை நெறிப்படுத்தியதிலும் இக் கலையில் ஆர்வலர்களை உருவாக்குவதிலும் இ. கோபால் வாத்தியாரின் பங்கேற்பு பெருமிதமானதாகும். கோபால் ஐயா அவர்களது நெறிப்படுத்தலில் உதவி வாத்தியார் ந. மோகனதாஸ் உட்பட ஏனைய கலைஞர்களும், ஆர்வலர்களும் பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளார்கள். அவ் அனுபவங்களைக் கொண்டு நூறாவது காமன்கூத்து அரங்கேற்றம்

காமன் வாத்தியார்; நல்லு மோகனதாஸ் ஐயாவின் தலைமையில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

காமன் கூத்து பல இடங்களில் அரங்கேற்றப்படுகிறது. அரங்க நெறிமுறைகளைக் கற்பிதங்களாகக் கொண்டும் பல இடங்களில் இக் கூத்து அரங்கேற்றப்படுகிறது. கால வரையறையைக் கருத்திற் கொண்டு அரங்க மயப்படுத்தும் முனைப்புகளும் தொடரப்படுகின்றன. இவ்வாறான பிரயோகங்களின் போது காமன் கூத்தின் உள்ளடக்கம் சிதைக்கப்படுகின்ற நிலையும் கவலைக்குரியதாகும். அவ்வாறான பலவீன அம்சங்களைத் தவிர்த்து இக் கூத்தின் முழுமையான உள்ளடக்கத்தையும் அவதானிக்கின்ற போக்கினை இத் தோட்டத்துக் காமன்கூத்து கொண்டுள்ளது. எனது அனுபவத்திலும் பல தோட்டங்களில் இடம்பெறும் காமன்கூத்துக்களை அவதானித்திருக்கிறேன். ஓர் ஆய்வுப் பார்வையில் இத் தோட்டமே எனது முதல் அவதானத்திற்குரியதாகத் திகழ்கிறது. 2011ம் வருடம் தினக்குரல் 'உதயசூரியன்' இதழில் காமன்கூத்து கலையறிவோம் தொடர், கொழும்புத் தமிழ்ச் சங்கம் 2012ம் வருடம்

நிகழ்த்திய உலகத் தமிழ் இலக்கிய மாநாடு ஆய்வரங்கத்தில் நிகழ்த்திய 'பன்முக நோக்கில் காமன்கூத்து' எனும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரை உருவாக்கம், 2016ம் வருடம் பிரான்சில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழாவில் காமன்கூத்தை அரங்கேற்றுவதற்கான அழைப்பு (பங்கேற்க முடியவில்லை), சமகாலத்தில் தாய்வீடு சஞ்சிகையில் தொடரும் 'மலையக மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன்கூத்து' எனும் தலைப்பிலான ஆய்வுத் தொடர் ஆகியவற்றைத் திருப்திகரமாக முன்னெடுக்கின்றமைக்கு பிளக்குவாட்டர் தோட்டத்துக் களம் மிகுந்த ஆதர்சத்திற்குரியதாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தோட்டம் காமன்கூத்து நேசிப்பாளர்களின் ஆழ்ந்த ஈடுபாடு அக்கறைத் தன்மை, அமரர்களான வாத்தியார்களின் ஆசீர்வாதம், கோபால் வாத்தியாரின் வாக்கு, ஆசி என்பதெல்லாம் காமன்கூத்துக் கலையின் இருப்பிடமாக நிலைபெறும் என்பது அசைய முடியாத நம்பிக்கையாகும். இளந் தலைமுறையினர் இக் கூத்தோடு தொடர்புபடுகின்ற அக்கறையும் ஈடுபாடும்

மேலும் நம்பிக்கையை வலுவாக்குகிறது எனலாம். இத் தோட்டத்தில் இடம்பெறும் நூறாவது காமன்கூத்து அரங்கேற்றம் திருப்தியையும் மகிழ்வையும் உணர்த்துகிறது. இம்முயற்சியில் உழைத்த அத்தனை நல்லுள்ளங்களும் போற்றப்பட வேண்டியவர்கள்.

மின்தமிழ் இணைப்பு:
https://groups.google.com/g/minTamil/c/eslyH2xk3VA

7. தனித்தமிழின் தேவை: ஒரு பார்வை

— பழமைபேசி

தமிழ்மொழி பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் வல்லமை கொண்ட சீரிளமைத் திறம் வாய்ந்தது. ஒருகாலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழின் தனித்தன்மையின் மீது தாக்கம் கொண்டபோது, மறைமலை அடிகள், பாவாணர் போன்றோரின் பங்களிப்பால் 'தனித்தமிழ் இயக்கம்' உருவானது. நாம் ஏன் தனித்தமிழைக் கடைபிடிக்க வேண்டுமென்பதற்குப் பல அழுத்தமான காரணங்கள் உள்ளன.

ஒரு மொழியின் தனித்துவம் என்பது அந்த இனத்தின் அடையாளமாகும். மொழியில் பிறமொழிச் சொற்கள் மிகைபடக் கலக்கும்போது, அந்த மொழியின் வேர்ச்சொற்கள் மெல்ல மெல்ல மறைந்து போகின்றன. இதனால் மொழியின் இலக்கணக் கட்டமைப்பும் சிதைந்து, ஒரு காலகட்டத்தில் அந்த மொழியே சிதைந்த நிலைக்குத் தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது. தமிழ்

சிதையாமல் அதன் முழுமைவடிவில் நிலைத்திருக்க, தனித்தமிழ்ப் பயன்பாடு மிக முக்கியமானதாகும்.

அடுத்து, தமிழ்மொழி அறிவியல் அடிப்படையிலான வேர்ச்சொற்களைக் கொண்டது. புதிய கண்டுபிடிப்புகள் , புதுத் தொழில்நுட்பங்களுக்குத் தகுந்தவாறு புதிய கலைச்சொற்களை உருவாக்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. நாம் பிற மொழிச் சொற்களை அப்படியே இரவலாகப் பெற்றுப் பயன்படுத்தும்போது, நம்முடைய சிந்தனைத் திறனும் புதிய சொற்களை உருவாக்கும் படைப்பாற்றலும் மங்கிப்போகின்றன. தமிழைத் தூய வடிவில் பயன்படுத்தும்போதுதான், அது காலத்திற்கேற்பப் படிவளர்ச்சி அடைய முடியும்.

தனித்தமிழ் என்பது வெறும் மொழியியல் சார்ந்த பற்றியம் மட்டுமன்று; அது நம் பண்பாட்டைக் காக்கும் அரண். ஓர் இனத்தின் பண்பாடும் வரலாறும் அதன் மொழியில்தான் பொதிந்துள்ளன. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை நாம் தடையின்றிப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், தமிழின் வேர்களை நாம் சிதைக்காமல் காக்க வேண்டும்.

பிறமொழிச் சொற்களின் கலப்பின்றிப் பேசுவதும் எழுதுவதும் அடுத்த தலைமுறைக்கு நாம் செய்யும் ஒரு பெரும் நற்பணியாகும்.

சுருக்கமாகச் சொன்னால், தனித்தமிழ் என்பது மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதன்று; மாறாக, தன் மொழியின் தனிச்சிறப்பை உணர்ந்து அதனை அழியாமல் காப்பதாகும். அன்றாடப் பேச்சுவழக்கில், ஆங்கிலம் , பிறமொழிச் சொற்களைக் குறைத்து, எளிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதனால் நாம் நம் தாய்மொழிக்குப் பெருமை சேர்க்க முடியும்.

தனித்தமிழ் என்பது வெறும் பிறமொழிச் சொற்களைத் தவிர்ப்பது மட்டுமன்று; அது தமிழின் தனித்துவமான இலக்கண மரபுகளை, தொன்மையான வழக்காறுகளையும் போற்றிப் பாதுகாப்பதாகும். ஒவ்வொரு மொழிக்கும் ஓர் ஆன்மா உண்டு. அந்த ஆன்மா, அதன் மரபு சார்ந்த நடையில்தான் வாழ்கிறது. ஆனால், இன்று நம்முடைய பேச்சிலும் எழுத்திலும் வடமொழி, ஆங்கில மொழிகளின் இலக்கணத் தாக்கமும், சிந்தனை முறையும் ஊடுருவித் தமிழின் இயல்பான அழகைச் சிதைத்து வருகின்றன. இது ஒரு மொழிச் சிதைவு

மட்டுமன்று, ஒரு பண்பாட்டு அடையாளத்தின் சிதைவுமாகும்.

பிறமொழி மரபுகளின் ஊடுருவலைக் களைவது இன்றியமையாதது. தமிழில் இல்லாதபிறமொழி எழுத்துகளையும், தத்திதச் சொற்களையும் பயன்படுத்துவதால் தமிழின் ஒலியியல் அமைப்பு மாறுகிறது. பழந்தமிழ் வழக்காறுகளைப் புறக்கணிப்பதும் தமிழின் செழுமையைக் குறைக்கிறது. தமிழ்ச்சொற்களிலேயே உயர்ந்த பொருளும் ஆழமான தத்துவமும் இருக்கும்போது, அவற்றை விடுத்துப் பிற மரபுகளைக் கொண்டாடுவது நம் மொழியின் தற்சார்புத் தன்மையை வலுவிழக்கச் செய்கிறது.

தற்காலத்தில் ஆங்கில மொழி மரபுகளின் ஆதிக்கம் தமிழை 'ஆங்கிலத் தமிழ்' வடிவாக மாற்றி வருகிறது. ஆங்கிலச் சொற்றொடர் அமைப்பைப் பின்பற்றித் தமிழில் எழுதுவது, தேவையற்ற இடங்களில் ஆங்கிலச் சொற்களைத் திணிப்பது போன்ற போக்குகள் பெருகியுள்ளன. கணினி, இணையம் போன்ற தற்காலத்துறைகளில், தமிழின் கலைச்சொற்களைப் பயன்படுத்தத் தயங்குவது, காலப்போக்கில் தமிழை ஒரு 'அடையாள

மொழியாக' மட்டுமே சுருக்கிவிடும். ஆங்கில மரபுகளைக் களைந்து, தமிழின் தனித்துவமான வினைச்சொற்களையும் பெயர்ச்சொற்களையும் கொண்டு புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்து கொண்டே இருக்கும் போது, தமிழ் ஒரு பயன்பாட்டு மொழியாகவும் நம்முள் குடிகொள்ளும்.

'தமிழ்த்தாலிபான்கள், தமிழ்த்தீவிரவாதிகள், பிற்போக்காளர்கள்' போன்ற சொல்லாட்சிக்கு ஆட்பட நேரிடும்தான். ஆனாலும் நாம்தான் ஒரு வேள்வியாகக் கருதிச் செயற்பட்டாக வேண்டும். அதுவே, தனித்தமிழ் முன்னவர் மறைமலை அடிகளார் அவர்களின் நூற்றைம்பதாவது ஆண்டினைக் கொண்டாடுவதற்குப் பொருண்மியத்தை ஊட்டும்!

கூடுதலாக, "பிழை திருத்துபவரின் மனைவி" எனும் இச்சிறுகதையும் வாசிக்கப் பரிந்துரைக்கப்படுகின்றது.

மின்தமிழ் இணைப்பு:
https://groups.google.com/g/minTamil/c/IrsD31SnTgs

8. இளங்கோவடிகளின் பார்வையில் பருவங்கள் தோறும் மதுரை மாநகர்

— முனைவர் தேமொழி

பழந்தமிழகத்தில் பருவகால மாற்றங்கள் எவ்வாறு இருந்தன என்பதை இலக்கியங்கள் மூலம் நம்மால் அறியமுடியும். குறிப்பாக ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு வகைப் பருவங்களில் மதுரை மாநகரில் வாழ்ந்த இளம்பெண்கள் செயல்பாடுகளை விவரிக்கின்றார்.

மதுரை மாநகரத்து மகளிர் இளநிலா முற்றத்தில் தம் காதலருடன் படுக்கையில் கிடந்து பழைய நினைவுகளில் மனம் செலுத்தினராம். தங்களின் நினைவோட்டத்தில் அப்பெண்கள் கார்காலம், கூதிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற் காலம் என வரிசையாக ஒவ்வொரு கால நிகழ்வுகளையும் நினைவு கூர்வதாக

சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டம் (14. ஊர் காண் காதை: 86 — 125), பகுதியில் காட்டப்பட்டுள்ளது.

அந்தி சாயும் வேளையில், மென்மையான மயக்கும் மாலை ஒளியில், மதுரை மகளிர் தங்களது அன்புக்குரியவர் பாராட்டும் வகையில் ஒப்பனை செய்து கொண்டு நிலாமுற்றத்தின் பூப்பஞ்சணை இருக்கைகளில் அவர்களுடன் இனிமையுடன் அமர்ந்திருப்பர்.

"கார்காலம்" (ஆவணி – புரட்டாசி மாதங்களில்) . . .

மகளிர் இடையில் பூப்போட்ட செந்நிறப் பட்டாடை அணிந்து, கூந்தலை முடித்து அதைக் குடச மலரால் அலங்கரித்து, சிறுமலைக்காட்டில் மலர்ந்த செங்கூதாளப் பூ, மணம் வீசும் அன்றலர்ந்த குறிஞ்சி மலர் ஆகியவற்றால் அலங்கரித்திருப்பர். செஞ்சாந்து பூசிய மார்பில் செங்கோட்டு வேரிப் பூச்சரம் அணிந்து, சிந்தூர மணப்பொடி பூசி நறுமண மூட்டிய உடலில் பவளக் கோவை அணிகலன் பூட்டியிருப்பர். மழைதரும் மேகத்திற்கு அரசனான, வச்சிரப் படையினைக் கொண்ட இந்திரனுக்கு ஆரவாரம் மிக்க மதுரையின் செவ்வணியை விளக்கமாகக்

காட்டுமாறு, கார்காலத்தை ஆளும் அரசன் வாடைக் காற்றோடு வரும் கார்காலத்தில் மட்டுமின்றி ;

"கூதிர் காலம்" (ஐப்பசி – கார்த்திகை மாதங்களில்) . . .

கட்டிடக்கலை பயின்ற வல்லுநர்களால் சிறப்பாகக் கட்டப்பட்ட, மேகம் தவழும் வகையில் உயர்ந்து நிற்கும் மாடத்தில், அழகிய மகளிர், அகிற் புகை தரும் விறகில் தீமூட்டிக் குளிர் காய்ந்தவாறு, மணக்கும் சந்தனம் பூசிய மார்பினையுடைய காதலரோடு இணைந்து இருக்கும் பொழுது, அவர்கள் குளிர் காற்றைத் தவிர்க்க சாளரங்களை அடைக்கும் கூதிர் காலமும்;

"முன்பனிக் காலம்" (மார்கழி – தை மாதங்களில்) . . .

செல்வச் சிறப்பு மிக்க இல்லங்களின் நிலா முற்றங்களில் மகளிரும் ஆடவரும் இளம் வெய்யிலில் வெயில் காய விரும்புவர், தெற்கில் மகர ரேகையில் இருந்து வடதிசைச் செலவாக ஞாயிறு வடதிசை நோக்கி நகரத் தொடங்கும் அக்காலத்தில், வானில் வெண்மேகங்கள் மிகக்

குறைவாகக் காணப்படும் முன்பனிக் காலத்தில் மட்டுமின்றி;

"பின்பனிக் காலம்" (மாசி – பங்குனி மாதங்களில்) . . .

மிகப் பெரிய கடலின் வழியே கப்பல் கூட்டத்தால் தொண்டி துறைமுகம் வழியாகக் கொண்டுவரப்பட்ட அகிலும் பட்டுத் துகிலும் சந்தனமும் வாசம் மிக்க பொருட்களும் கருப்பூரமும் சுமந்து வந்த கொண்டல் என்னும் கீழ் காற்றோடு பாண்டிய மன்னனின் கூடல் நகரில் நுழைந்து, காமனது விழாவினைக் கொண்டாடும் பின்பனிக் காலமாகிய பங்குனித் திங்கள் நாட்களில்;

"இளவேனில் காலம்" (சித்திரை – வைகாசி மாதங்களில்) . . .

குருக்கத்தி கொடிகளில் மலர்கள் மாலை போன்று மலரும் வகையில் அக்கொடிகள் வளரவும், காடுகளிலும் பூங்காக்களிலும் நறுமணமிக்க மலர்கள் பூக்கவும், பாண்டிய மன்னனின் பொதிகை மலையின் தென்றல் மதுரை மாநகர் நுழையவும், தன் துணையைக் கூடி மகிழவும் செய்யும் இனிமையான இளவேனில் அரசன் எங்குள்ளான் என்று வியக்க

நேரும். பூங்கொடி போன்ற மகளிர், தம்மையுடைய காதலர்களோடு இளவேனில் பருவ காலத்தின் வரவை விரும்பி மகிழ்ந்து அதனால் வருத்தம் நீங்கிய காலத்தே;

"முதுவேனில் காலம்" (ஆனி – ஆடி மாதங்களில்) . . .

கன்றுகள் விரும்பிய பிடியின் கூட்டத்தோடு அவற்றைக் காக்கும் களிறுகள் நடுங்கும்படி, வெயில் நிலைபெற்ற மலைசார்ந்த இடங்களில் காட்டுத்தீ தோன்றி பரவச் செய்த மேற்கிலிருந்து வீசிய காற்று கோடைக் காலத்தில் புகும் பொழுது மதுரை மாநகரை ஆட்சி செய்து கொண்டிருந்த வேனில் அரசன், தென்திசைச் செலவாக மகர ரேகையை நோக்கி முன்னேறி மதுரையை விட்டு வேறிடம் செல்ல நகர்ந்து கொண்டிருக்கும் வெயிலின் கடைசி நாள் அது.

இவ்வாறு ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு பருவ காலத்திலும் மக்கள் மகிழ்ச்சியில் திளைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மதுரை மாநகரில் ஆடிமாத இறுதியில், கோடைக் காலம் முடியும் தறுவாயில், புறஞ்சேரியில் மாதரியின் இல்லத்தில் கண்ணகியை

விட்டுவிட்டு கோவலன் மதுரை மாநகருக்குள் நுழைகிறான்.

சான்றாதாரம்:
சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம்: 4. ஊர் காண் காதை
https://www.tamilvu.org/library/l3100/html/l3100016.htm

மின்தமிழ் இணைப்பு:
https://groups.google.com/g/minTamil/c/CY9wnEe8vm4

9. வாழும் மூதாதையர்கள் – நூல் அறிமுகம்

— பானுரேகா



ஆசிரியர்: முனைவர் அ. பகத்சிங்
பதிப்பகம்: உயிர் பதிப்பகம்
பக்கங்கள்: 178

இந்தப் புத்தகத்திலுள்ள கட்டுரைகள் உயிர் இதழில் வெளிவந்தவை, இவற்றில் உள்ள ஒளிப்படங்கள் ஒவ்வொன்றும் அருமையாக உள்ளன.

பழங்குடி மக்களான இருளர்கள், ஆனைமலை காடர்கள், அகத்தியமலை காணிகள், காடுகளின் நாயகர்கள், கோத்தர்கள், நீலகிரி குறும்பர்கள், கிழக்குத் தொடர்ச்சி மலை மலையாளிகள், பாண்டியநாட்டு முதுவர்கள், பளியர், பணியர் சத்தியமங்கலம் சோளகர்கள், மற்றும் தோடர்கள் என 13 வகை பழங்குடிகளை பற்றிய வாழ்வியலைச் சொல்லும் ஆய்வுக் கட்டுரைகள் இவை.

ஆசிரியர் பகத்சிங் பழங்குடிகள் குறித்த ஆய்விற்காக மேற்கொண்ட பயணங்களின் மூலம் அவர்கள் பண்பாடு, நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதோடு அவர்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்களையும் எடுத்துரைக்கிறார். தமிழகத்தில் மொத்தம் உள்ள 36 பழங்குடிகளில் 6 சமூகத்தவர் தொன்மையான பழங்குடிகள் என அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர்.

வாழ்வியல் முறைகள்

இயற்கையோடு இணைந்த வாழ்வு இந்த பழங்குடிகளின் வாழ்வு. திருமண சடங்குகள், விழாக்களைக் கொண்டாடும் முறை ஆகியவை பெரும்பாலான பழங்குடிகளுக்கு ஒற்றுமையாகவே உள்ளது. இசையும் நடனமும் வாழ்வியலில் இரண்டறக் கலந்துள்ளன.

விதவை (விதுரன்.. இப்போது தான் இச்சொல்லைக் கேள்விப்படுகிறேன்) மறுமணம் சாதாரணமாக நடைபெறுவது, உழைக்கும் நபராக உள்ள பெண்ணை மணம் புரிவதால் பரிசப் பணம் மணமகள் வீட்டிற்கு தருவது ஆகியவை சிறப்பு.

அகத்தியமலை காணிகள் ஆரோக்கியப் பச்சை என்ற மூலிகையை அறிமுகம் செய்து உலகத்தின் கவனத்தை பெற்றுள்ளனர்.

இதுபோல பழங்குடிகள் பெற்றுள்ள பாரம்பரிய மருத்துவ அறிவு, சாதிய படிநிலை அற்ற சமத்துவ சமூக அமைப்பு, இயற்கையோடு இணைந்த எளிமையான வாழ்க்கை முறை என நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன.

பொதுவாக பழங்குடிகள் என்றாலே நமது சமூகத்தில் ஏளனப் பார்வை நிச்சயம் அந்த ஏளனப் பார்வையை மாற்றும் வகையில் இந்த நூல் உள்ளது. அணிந்துரை வழங்கிய ஆசிரியர் நக்கீரன், பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன், பேராசிரியர் செல்லப்பெருமாள் ஆகியோர் அனைவரும் வலியுறுத்துவது இதையே. அவர்களது வாழ்க்கையை அவர்களது போக்கிலேயே தொந்தரவு செய்யாமல் விடுவதுதான். அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்ற பெயரில் நாம் செய்வது என்ன?

இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் இந்த சமூகம் இன்றைக்கு சந்திக்கக்கூடிய சவால்களை வெளிக்காட்டி அமைகின்றது. அவர்களுக்கு உதவி செய்வதாக நினைத்துக்கொண்டு நாம் அவர்களை துன்பத்துக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தால் போதுமானது.

வில் அம்பு சடங்கு வித்தியாசமாக உள்ளது. சேவையாட்டம் இன்று நிகழ்த்து கலையாக நடைபெற்று வருகிறது.

பண்பாட்டினை மீட்டெடுப்பதற்காக நீலகிரி குறும்பர்கள் *நாட்டு ஹப்பா* என்ற பண்பாட்டு விருந்தோம்பல் நிகழ்வு நடத்துகின்றனர்.

ஆகஸ்ட் 9 பழங்குடிகள் தினம்.

2019 பழங்குடியின மொழிக்கான சர்வதேச ஆண்டு இரண்டு வாரத்திற்கு ஒரு பழங்குடி இன மொழி அழியும் நிலையில் உள்ளதாம்.

இப்புத்தகத்தின் ஆசிரியர் மானிடவியல் குறித்து ஒரு இணையவழிக் காணொளியில் பேசினார். மானிடவியல், இனவரைவியல் இதெல்லாம் நமக்கு புதியதாயிற்றே? முழுசா கேட்போமா? என்ற சந்தேகத்துடன் கேட்க ஆரம்பித்தேன். ஆனால் எப்படி ஒன்றரை மணி நேரம் கடந்தது என்றே தெரியவில்லை. அவரின் பேச்சை போலவே இந்த நூலும் எளிமையாக, சுவாரசியமாக, எளிய மக்களின் மீதான அக்கறையோடு உள்ளது.

10. ராமானுஜரின் மேல்கோட்டைப் பயணம்

— முனைவர் தேமொழி

இராமானுஜர் வாழ்ந்த காலம் முதலாம் குலோத்துங்கன் காலம் என்பதை வரலாற்றுச் செய்திகள் மூலம் அறிய முடிகிறது. ராமானுஜருடன் சோழ மன்னருக்குத் தனிப்பட்ட வகையில் மோதல் இருந்திருக்கலாம், இது நடந்த காலம் கிபி 1100 களின் தொடக்கமாகவும் இருந்திருக்கலாம். வைணவக் கோயில்களுக்குக் கொடை வழங்கிய மன்னர் இவர் என்பதால் மன்னர் ஒரு வைணவப் பெரியாருடன் கொண்ட மோதலை மதவெறிச் செயல் என்று கூற வாய்ப்பில்லை.

சூழ்நிலை சரியில்லை என்று ராமானுஜர் சோழநாட்டிலிருந்து வெளியேறி இன்றைய கர்நாடகா பகுதிக்குச் சென்றார் என்பதற்கு கர்நாடகா / ஹோய்சாள மன்னர் பக்கத்துத் தரவுகளும் உண்டு. ஹோய்சாள மன்னர் பிட்டிதேவா / விஷ்ணுவர்தனன் (1108–1152) என்பவரைச் சமணத்திலிருந்து வைணவத்திற்கு

மாற்றினார் ராமானுஜர் என்பது கர்நாடக நாட்டு வரலாறு.

மன்னரின் மகளுக்கு வயிற்றுவலி போல அவளைத் துன்புறுத்திய ஒரு தீராத நோயை ராமானுஜர் தீர்த்தார் அதனால் மன்னர் மதம் மாறினார் என்பது ஒரு கர்நாடகா கதை. ராமானுஜரை தப்புவித்த அவருடைய சீடர் கூரத்தாழ்வார் கண்கள் சோழ மன்னர் ஆணையால் குருடாக்கப்பட்டன என்று மற்றொரு தமிழ்நாட்டுக் கதையும் உண்டு.

அடிப்படையில், சுங்கம் தவிர்த்த சோழர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ராமானுஜர் மேல்கோட்டைக்குச் சென்றார் என்பது உறுதியாகத் தெரிகிறது. அந்நாட்டு மன்னரைச் சந்தித்து அவரை வைணவத்திற்கு மாற்றினார் என்பதும் தெரிகிறது. விஷ்ணுவர்தனன் என்ற பெயரே ராமானுஜர் பிட்டி தேவா மன்னருக்குச் சூட்டிய பெயர்.
(குறிப்பு: ராமானுஜர் சோழ நாட்டைவிட்டு ஏன் போனார் எதற்காகப் போனார் என்பதும் வேறு ஓர் ஆய்வு; எவ்வாறு ஹோய்சாள மன்னரை மதம் மாற்றினார் என்பதும் வேறு ஓர் ஆய்வு).

அவ்வாறு சென்றவர் ஈரோடு சத்தியமங்கலம் வழியாகச் சென்ற பொழுது அப்பகுதி வேட்டுவ அரசரும் அவருடைய மக்களும் ராமானுஜருக்கு உணவளித்து அவரைக் கொள்ளேகலம் வரை பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்கள். வைணவப் பெரியார் ஒருவரைக் காப்பாற்றிய அவர்களுடைய செயலை மெச்சி ஹோய்சாள மன்னர் அவர்களுக்கு நான்கு கிராமங்களையும் அவற்றுடன் திருக்கோயில் மற்றும் ஒரு திருக்குளம் ஆகியனவற்றை வழங்கினார் என்று கொங்கு நாட்டுச் செய்தி ஒன்று பதிவாகியுள்ளது.



ஸ்ரீ

ஸ்ரீ மதே ராமானுஜாய நமஹ

ஈரோடு மாவட்டம் கள்ளிப்பட்டி அருகாமையிலுள்ள கணக்கம்பாளையம் ஜகிர்தார் ஸ்ரீ பெருந்தேவி சமேத ஸ்ரீ கரிவரதராஜப்பெருமாள் கோவில் (1505)

கோயில் திருக்குளம்

இந்த சக்தியவாய்ந்த, சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் வைஷ்ணவ ஆச்சார்யரான ஸ்ரீ ராமானுஜர் அவர்கள் மைசூர் மகாராஜாவால் கொடுக்கப்பட்ட திருக்கோயில் மற்றும் திருக்குளம், 250 ஆண்டுகளுக்கு முன் எடுப்பட்ட வெள்ளத்தினால் முன் பூர்த்தி ஆகி, மதுர ஜீவனோத்தரான மஹான் ஸ்ரீ பாஷ்யகேசுக நடை பெற்றது. ஆனால் அப்பொழுதும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி, சுமார் 20 ஆண்டுகளுக்கு திருக்கோயிலின் முக்கியமான அங்கம். ஆனால் இந்த திருக்குளம்மட்டும் திருத்தப்படாமல் தொடர்ந்து பெருமழையை. திருக்குளம் என்பது ஒரு அதற்கு பின்னால் ஆண்டு 2022ல் தீவியமாக யோசனைசெய்து நமிழ்நாடு அரசின் மூலிந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளால் சுமார் 35 லக்ஷம் ரூபாய் செலவினையான இந்த பணியை துவக்கிவைத்து டிசம்பர் 2024ல் பூர்த்தி ஆகும் நிலையில் உளது.

இந்த திருக்குளத்தின் பெயர் சித்திரை திருக்குளம். இந்த தீர்த்தத்தின் பெயர் பத்ம தீர்த்தம். இந்த திருக்குளம் ஸ்ரீ கரிவரதராஜ ஸ்வாமி கோயிலுடன் இணைக்கப்பட உள்ளது.

இந்த கோயிலின் விசேஷம் என்னவென்றால் ஸ்ரீ ராமானுஜர், ஒரு மகான் மற்றும் வைணவ பெரியவர், ஒரு காலப் கதிரு ஸ்ரீ ரங்கநாதரு ஸ்வாமி சோழராஜாவின் கோபத்தினால் வெளியேறவேண்டியிருந்தது. அப்பொழுது காவிரியாற்றை தனித்து வென்னையாக, தர்த்தருக்கொண்டு வைஷ்ணவ பெரியவர், ஒரு மகான் மற்றும் ஸ்ரீ ரங்கநாதரு ஸ்வாமி சோழராஜாவின் கோபத்தினால் பட்டிவிளாகப்படுகு ஸ்ரீரங்கத்திலிருந்து கணக்கம்பாளையம் இவரை வந்து சேர்ந்தார் அவரை குழலில் சென்றும் ஸ்ரீ ரங்கநாதர்கள். அனைவருக்கும் குளிர், காரமும் ஏறபட்டது. அத்தருணத்தில் அங்கிருந்த வேடுவ மக்கள் பெண்களாட, அனிந்த ஸ்ரீரங்காராஜருக்கும் மற்றும் உடன் இருந்தவர்களுக்கும் தேனும், நிலவாம் கொடுத்து பெரம்பம் காய்ச்சி நம்பிக்கையுள்ளதார்கள். பிறகு அவர்களை ஜாகிலிருந்தாக வைத்து ராஜாவிற்கு (சோழனிடம்) அனுப்பி வைத்தார்கள்.

அன்று இவர்கள் ஸ்ரீரங்கநாதரை காப்பாற்றியிலையாமலிருந்தால் அன்னாரின் பிறகாலத்து 40 வருட வைணவ சேவை காலத்திற்கு கிடைக்காமல் போயிருக்கும். இதனை பின்னால் உணர்ந்த மைசூர் மகாராஜா, கணக்கம்பாளையம் இவரகாவிலுள்ள 4 கிராம நிலங்கள் மற்றும் நத திருக்கோயிலும் (திருகண்ணாம்பூர் வேத்தரம்) அதன் திருகுளமும் அங்கு வசிக்கும் மக்களுக்காக கொடுத்தார் (Reference: Mackenzie Collection available in madras museum).

அந்த திருக்கோயிலின் திருக்குளம்தான் இப்பொழுது புரர் நிர்மாணிக்கப்படுகின்று இதனால் பெருமளவு நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும் பெருமளவு நிலத்தடி நீர்தான் எடுத்துக்கொள்ளப்படும். ஆகம அடிப்படியில் நீர்தான் இந்துவரை திருகுளம்மட்டுமில்லாது பெருமளவு நிலத்தடி நீர்தான் எடுத்துக்கொள்ளப்படும். ஆகம அடிப்படியில் பெருமளவு நிலத்தடி நீர்தான் எடுக்கப்பட்டு வரும் நிலையில், இனி முதலாவதாகவும் திருக்குளத்திலிருந்தே நீர்தான் எடுத்துக்கொள்ளப்படும். ஆகம அடிப்படியில் பெருமான் குப்பாபிஷேகம் 12 வருடத்திற்கு மேல் தள்ளி போவின்று நிலை ஏறபட்டால அவர் தனது சக்தியின் பாதுகாத்த தானு திருக்குளத்தில் வைபவார் என்பது ஐதீகம். அக்குளத்தை சீர் செய்வதின் பலனாக பெருமளவு சக்தி பூர்ணத்துவம் அடைகிறது.

அன்புடையீர்,

- ஸ்ரீ ஜகாமானுஜர் சென்ற பாதை என்பதால் புண்ணிய பூமியாக விளங்கும் இந்த கணக்கம்பாளையம் கிராமம். இந்த திருக்குளத்தின் மறு சேர்க்கையினால் மேலும் புனிதமாகி சீரும் சிறப்புமாய் செழிப்புடன் காணப்படும்.
- இந்த ஸ்ரீ கரிவரதராஜப்பெருமாள் கோயிலானது, உடுத்தி திரிதண்டியினால் சேவை சாதிக்கிறார் எனது இக்கோயிலின் முக்கியமானவை. அம்சம். இக்கோயிலின் மகத்துவத்தையுணர்ந்து, ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீ பேரருளாளன் மற்றும் எம்பெருமானாரக்களிடு நுதியெடு அவர்கள் அருளுக்கு பாத்திரமாக வேண்டுகிறோம்.

1. கணக்கம்பாளையத்தை எப்படி அடையலாம்?
a) ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து சுமார் 50km தொலைவில் அமைந்துள்ளது.
b) ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து கோபிசெட்டிபாளையம் வழியாக 1மணி நேரத்தில் பயணம் அடைந்து அங்கு ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து கோபிசெட்டிபாளையம் வழியாக 1மணி நேரத்தில் பயணம் அடைந்து அங்கு வந்தவுடன் பயணம்.
c) அருகிலுள்ள விமான நிலையம் கோயம்பத்தூர் (சுமார் 100km தொலைவில்)

2. இந்த திருத்தலம் சற்றுமாதலையாக மாற நல்ல வாய்ப்புள்ளது அதை அல்லது தனியார் நிறுவனங்கள் இதனை மக்களுக்காக வேண்டுகிறோம்.

5/12/2024

Y நரசிம்மன்
பரம்பரை அறங்காவலர் (கொமாண்டரி வம்சம்)
ஸ்ரீ பெருந்தேவி சமேத ஸ்ரீ கரிவரதராஜப்பெருமாள் திருக்கோயில், கணக்கம்பாளையம்
9444911440

Designed by Kari Varada Kalkaryn Sabha, Srirangam

[This document was provided by Dr. Valaiparameswaran. MD]

இச்செய்திக்கு சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள மெக்கன்சி ஆவணங்கள் ஒன்றிலும் சான்று இருப்பதாகக் கணக்கம்பாளையம் கோயில் திருப்பணி அறிவிப்பில் கூறப்படுகிறது. இச்செய்தி குறித்து மெக்கன்சி ஆவணத்தில் இருப்பது தொல்லியல் குறிப்புகளா அல்லது வாய்வழியாகப் பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்ட தகவலா என்பது விரிவாக அறிய வேண்டிய ஒன்று. விஷ்ணுவர்தனன் சோழர் ஆட்சியில் இருந்த சில கொங்குப் பகுதிகளையும் கங்கபாடி பகுதிகளைக் கைப்பற்றி நாட்டை விரிவாக்கிய மன்னன் என்பதும், ஹோய்சாள மன்னர்களில் சிறந்தவன் என்பதும் வரலாறு. அப்பகுதி விஷ்ணுவர்தனன் ஆட்சியின் கீழ் இருந்ததால்தான் அவராலும் வேட்டுவ குடி மக்களின் செயலைப் பாராட்டி கிராமங்களைக் கொடையாகக் கொடுக்க முடிந்துள்ளது.

இச்செய்தியின் அடிப்படையில்; ராமானுஜர் திருவரங்கத்தில் இருந்து காவிரியின் வடகரையில் பயணப்பட்டு ஈரோடு சத்தியமங்கலம் வழியாகக் கொள்ளேகலம் சென்று சேர்ந்தார் என்பதை யூகிக்க முடிகிறது.



தில்லை கோவிந்தராஜர் சிலையை கடலில் வீசியதாகக் கூறப்படும் நிகழ்ச்சியும் அக்காலத்தில் வாழ்ந்த சோழ அரசவைப் புலவர் ஒட்டக்கூத்தரால் அவருடைய நூல்களில் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால்; பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் நிறுவப்பட்ட தில்லைக் கோவிந்தராஜர் சிலையைக் கடலில் மூழ்கடித்த சோழ மன்னர் இரண்டாம் குலோத்துங்கர் ஆவார். இவர் அநபாயச் சோழர் என்றும் கிருமிகண்ட சோழர் என்றும் அழைக்கப்படுவார். இவர் முதலாம் குலோத்துங்கரின் பேரன். இவரும் மதவெறியால் செய்யவில்லை. சிதம்பரம் நடராஜர் கோயிலைச் சீரமைக்கும் நோக்கில் செய்தார் என்றும் கூறுகிறார்கள். (ஆனால்; அரசன் ஒரு பாழ்பட்ட

படிமத்தை நீக்கி, அதைக் கடலில் போட ஏற்பாடு செய்தது அரசவைப் புலவர் பாடல்களில் மீண்டும் மீண்டும் ஒரு சாதனை போலக் குறிப்பிடும் அளவிற்கு முக்கியத்துவம் பெற்றது அல்ல.)

சோழ வேந்தர் கால வரிசை :
குலோத்துங்க சோழன் I — கி.பி. 1070–1120
விக்கிரம சோழன் — கி.பி. 1118–1135
குலோத்துங்க சோழன் II — கி.பி. 1133–1150
இராசராச சோழன் II — கி.பி. 1146–1163

ஒட்டக்கூத்தரின் காலம் 12 ஆம் நூற்றாண்டு. ஒட்டக்கூத்தர், விக்கிரமசோழன் காலத்தில் அவைப்புலவராக இருந்துள்ளார். தொடர்ந்து அவன் மகன் குலோத்துங்கன் காலத்திலும், பிறகு அவனது மகன் இராசராசன் காலத்திலும் அவைப்புலவராக இருந்துள்ளார். இம்மூவர் காலத்தைக் கி.பி. 1118–1163 வரை என்று வரலாறு குறிக்கிறது. அப்பொழுது இவர் அம்மூவர் மீதும் 'விக்கிரம சோழனுலா', 'குலோத்துங்க சோழனுலா', 'இராச ராச சோழனுலா' என்று இயற்றிய உலாக்கள் "மூவருலா" என்று அழைக்கப்படுகிறது. ஒட்டக்கூத்தர் இயற்றிய மற்றொரு நூல் – தக்கயாகப்பரணி.

இணையக்கல்விக்கழகம் மூவருலா நூலுக்குத் தரும் விளக்கத்தில் திருமாலை கடலில் மூழ்கடித்த செய்தியைக் காணலாம் (பார்க்க: https://www.tamilvu.org/courses/degree/c012/c0124/html/c01244l2.htm);

மற்றும்: ஒட்டக்கூத்தர் அவர் இயற்றிய மூவருலா (https://archive.org/details/dli.jZY9lup2kZl6TuXGlZQdjZI2/mode/2up) நூலிலும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறார்.

தில்லைக் கோயிலில் இருந்த திருமால் மூர்த்தியை எடுத்துக் கடலில் மூழ்கச் செய்தான் சோழன் என்பதைக் குலோத்துங்க சோழனுலா மற்றும் இராசராச சோழனுலா நூல்களில் கீழ்க்கண்டவாறு ஒட்டக்கூத்தர் குறிப்பிடுகிறார்

“தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்,
தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து –
மல்லற்”

(ஒட்டக்கூத்தர் இயற்றிய – குலோத்துங்க சோழனுலா கண்ணி – 39)

"பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து,
முன்னைக் கடலகழின் மூழ்குவித்த – சென்னி."

(ஒட்டக்கூத்தர் இயற்றிய – இராசராச சோழனுலா கண்ணி – 33)

தக்கயாகப்பரணி நூலில்:

"முன்றிற் கிடந்த தடங்கடல்போய் முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை, மன்றிற் கிடங்கண்ட கொண்டல்."

(ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி–777)

எது எப்படி இருந்தாலும் இச்செயல்கள் வைணவர்களுக்குத் துயரத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதை மறுக்க முடியாது. தாத்தா ராமானுஜரிடம் கடுமையாக நடந்து கொண்டதற்கும் பேரன் கோவிந்தராஜர் சிலையைக் கடலில் போட்டதற்கும் இடையே உள்ள கால இடைவெளி அரை நூற்றாண்டுக்கும் குறைவாக இருக்கலாம்.

11. தியாசஸின் வீடு – போம்பேயி

— முனைவர் க. சுபாஷிணி

Pompei – போம்பேயி, இத்தாலியின் நேப்பள்ஸ் நகருக்கு அருகே உள்ளது. அங்கிருக்கும் விசிவிஸ்கள் எரிமலை வெடித்தபோது அதன் நெருப்புக் குழம்பினாலும் சாம்பலினாலும் புதையுண்ட ஒரு நகரம் இது. பல காலகட்டங்களில் அங்கு அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றன, நடந்து கொண்டுமிருக்கின்றன.

2023ஆம் ஆண்டில் அங்கு நான் சென்றிருந்த போது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட கட்டட அமைப்பு, சுவர் சித்திரங்கள், பளிங்குச் சிற்பங்கள் மட்டுமன்றி எரிமலை துகள்களினால் கொல்லப்பட்ட மக்களின் உடல்களையும் அங்கு

காண முடிந்தது. நான் சென்றிருந்த காலகட்டத்தில் சில பகுதிகளில் அகழாய்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அப்போது நேரில் கண்டேன்.

அண்மையில் அங்குள்ள ஒரு பிரம்மாண்டமான வீட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது, தூண்களால் சூழப்பட்ட ஒரு சாப்பாட்டு அறை கண்டெடுக்கப்பட்டது. கி.மு. 40 முதல் 30 வரையிலான காலத்தைச் சேர்ந்த சுவர் ஓவியங்கள், மதுக் கடவுளான தியாசஸினைப் பின்பற்றும் மனிதர்களைச் சித்தரிக்கின்றன. தியாசஸின் ஊர்வலத்தைக் குறிக்கும் சொல்லின் அடிப்படையில், ஆராய்ச்சியாளர்கள் இந்த வீட்டிற்கு 'தியாசஸின் வீடு' (House of the Thiasus) என்று பெயரிட்டுள்ளனர்.

போம்பேயி உலக அகழாய்வுகளின் பேரதிசயம். இங்கு தோண்டத் தோண்ட புதிய தரவுகள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.

மேலும் வாசிக்க: போம்பேயி அகழாய்வு

12. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்

— மார்ச் 1, 2026 — மார்ச் 31, 2026 நிகழ்வுகள்.

க. எத்திராஜ் மகளிர் கல்லூரியில் பயிலரங்கம்

எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நேற்று (07–03–2026) ஆய்வாளர்களுக்கான ஒரு பயலரங்கம் "நவீன ஆராச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும்" எனும் தலைப்பில் நடைபெற்றது. இதில் "உலகளாவிய தமிழியல் ஆய்வுகள்" என்ற தலைப்பில் எனது உரை அமைந்தது.

அந்த நிகழ்ச்சியின் போது இனிய தோழர் ஒளிவண்ணன் அவர்கள் அம்பேத்கரியம் 50 நூல்

தொகுப்பு ஒன்றை வாங்கி கல்லூரி நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார்.

பயிலரங்கில் உரையாற்ற வந்திருந்த நானும் மற்றும் முனைவர் சங்கர சரவணன் அவர்களோடு மேலும் கல்லூரியின் முதல்வர் தமிழ்த் துறை தலைவர், பேராசிரியர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டோம்.

– முனைவர் க. சுபாஷிணி,
தலைவர்,
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
(08–03–2026)

உ. புனித ரமலான் மரபு நடை

சென்னை திருவல்லிக்கேணி பெரிய மசூதி வளாகத்தில் 07–03–2026 சனிக்கிழமை அன்று நடைப்பெற்ற புனித ரமலான் மரபு நடையின் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் தமிழ் மரபு அறக்கட்டளை குழுவினரும் கலந்து கொண்டோம்.

வரலாற்று ஆய்வாளர் கோம்பை அன்வர் அவர்கள் இந்த மசூதி மற்றும் அதனை உருவாக்கிய ஆற்காடு நவாப் தொடர்பான வரலாற்று செய்திகள் சிலவற்றை பகிர்ந்து கொண்டார். அதன் பின்னர் அனைவரும் நோன்புக் கஞ்சி பெற்றுக் கொண்டோம்.

13. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்

க. இணையவழி இலக்கியக்கூடல் நேரலைகள்

முனைவர். ப. பாண்டியராஜாவின் "நக்கீரர் நடைப்பயணம் (நெடுநல்வாடை)" – **நூல்திறனாய்வு:** ஆசிரியர் ஹுஸ்னாராபானு இலக்கியக்கூடல் – 14 [மார்ச் 14, 2026] https://youtu.be/HGhR82E0FDQ

———

உ. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்

வையத் தலைமை கொள் பிரிவின் சிறப்பு நிகழ்ச்சி

"மகளிருக்கான சிறுதொழில்கள்"

— திரு. சுந்தர வடிவேல் சுப்பராயன்

திசைக்கூடல் – 398 [மார்ச் 21, 2026]

https://youtu.be/YwxvTl8sMfg

———

ந. சுவலி — ஒலிநூல்கள்

கட்டுரை: தமிழ் நாட்டின் தலை சிறந்த பெண்மணிகள்–முத்து லெட்சுமி ரெட்டி
கட்டுரை ஆசிரியர்: கடலோடி திரு.நரசய்யா
வாசிப்பவர்: கடலோடி திரு.நரசய்யா
https://suvali.tamilheritage.org/தமிழ்–நாட்டின்–தலை–சிறந்

———

கட்டுரை: பூஜாங் பள்ளத்தாக்கு – கடாரமும் அதன் வரலாறும்

கட்டுரை ஆசிரியர்: முனைவர் க.சுபாஷிணி

வழங்குபவர்: முனைவர் க.சுபாஷிணி

https://suvali.tamilheritage.org/பூஜாங்–பள்ளத்தாக்கு–கடா

———

ச. புகழ் அஞ்சலி

பேராசிரியர் Herman Kulke அவர்களுக்கு தமிழ் மரபு அறக்கட்டளையின் புகழ் அஞ்சலி

பேராசிரியர் Herman Kulke அவர்கள் 10–03–2026 அன்று ஜெர்மனியில் காலமானார். இந்திய ஆய்வுலகில் தவிர்க்கப்பட முடியாதவர். இந்திய பண்பாடு மற்றும் வரலாறு பற்றிய ஆய்வுகளில்

தனது சீரிய பங்களிப்பை வழங்கிய பெருமை இவருக்கு உண்டு. இவரது ஆய்வு நூல்கள் மற்றும் தொகுப்பாசிரியராக பணியாற்றிய ஒவ்வொரு ஆவணமும் தமிழ் ஆய்வுலகத்திற்கும் மிக முக்கியமானவை.

இவர் Nagapattinam to Swarnadwipa என்ற மாபெரும் ஆய்வு கட்டுரை தொகுப்பின் இணைத்தொகுப்பாசிரியரும் கூட. இந்த ஆவணத்தின் தொகுப்பாசிரியர் ஆய்வுலகம் நன்கு அறிந்த ஜப்பானிய பேராசிரியர் நொபுரு கரோஷிமா அவர்கள்.

2010ஆம் இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஶ்ரீ விருதை இவர் பெற்றார். விக்கிபீடியாவில் இவரது படைப்புகளின் பட்டியலை காணலாம்.

இவருக்கு தமிழ் மரபு அறக்கட்டளையின் அஞ்சலி!

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்



மக்கள் வரலாறு (3 தொகுதிகள்)

வள்ளுவர் குறள் ஆதிச்சூடி முறையில்

விண்ணை நோக்கி

தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்

மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1

மட்டக்களப்பு

தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்


கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்

தமிழர் புலப்பெயர்வு

பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்

இலக்கிய மீளாய்வு

இராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி

நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு

கணிதவியல் - பொதுக் கட்டுரைகள்



தமிழகத்தில் பௌத்தம்


விளையாடிய தமிழ்ச் சமூகம்

கல்வெட்டில் தேவதாசி

தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்

வரலாற்றில் பொய்கள்

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்



தமிழ் வலசை

மணிமேகலையின் பௌத்தப் பேரறம்

செம்மொழியும் மின் தமிழும்



Ancient Tamil Corpus: A Key T
Understand The Indus Riddle



சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்

தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்

தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கிய கடல்களும் கடல்கொண்ட நிலங்களும்

வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம் நகரும் நகர்ப்புறமும்

நீலக்கடல் முழுவதும் சுற்றும் விடுவோம்

பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 2)



பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 1)

நக்கீரர் நடைப்பயணம் (நெடுநல்வாடை)

வரலாற்று ஆய்வில் களப்பணிகள்



ராஜராஜனின் கொடை

கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்

கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்

கீழக்கரை வரலாறு

நாகர் நிலச்சுவடுகள்



அறியப்பட வேண்டிய தமிழகம்

திருவள்ளுவர் யார்?

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

1. Der Kural Des Thiruvalluvar
   By Dr.Karl Graul (First edition 1856 reprinted - 2019) Euro.25

2. Thiruvalluvar's Prose
   By August Fridrich Cammerer(First edition 1803 reprinted - 2019) Euro 25

3. **திருவள்ளுவர் யார்?** (2021)
   ரெளதம சன்னா ரூ.200

4. **நாகர் நிலச்சுவடுகள் (இலங்கை பயண அனுபவம்)** (2020)
   மலர்விழி பாஸ்கரன் ரூ.100

5. **அறியப்பட வேண்டிய தமிழகம்** (2021)
   தொ. பரமசிவன் நேர்காணலும் கட்டுரைகளும்
   தொகுப்பாசிரியர் - முனைவர்.க.சுபாஷிணி ரூ.80

6. **கீழக்கரை வரலாறு** (2021)
   எஸ்.மஹ்மூது நெய்னா *(இப்போது.காம் இணைபதிப்பு)* ரூ.300

7. **கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்** (2021)
   துரை சுந்தரம் ரூ.160

8. **கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்** (2021)
   துரை சுந்தரம் *ரூ.140*

9. **தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்**(2021)
   கோ. சசிகலா ரூ.180

10. **வரலாற்றில் பொய்கள்** (2021)
    தேநிமாழி ரூ.100

11. **விளையாடிய தமிழ்ச்சமூகம்** (2022)
    ஆ. பாப்பா ரூ.300

12. **கல்வெட்டில் தேவதாசி** (2022)
    எஸ் சாந்தினிபி ரூ.150

13. **ராஜராஜனின் கொடை** (2022)
    க. சுபாஷிணி ரூ.180

14. **இலக்கிய மீளாய்வு** (2023)
    தேநிமாழி ரூ.150

15. **கணிதவியல்** (2023)
    ப. பாண்டியராஜா ரூ.180

16. **ராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி** (2023)
    ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.90

17. **வரலாற்று ஆய்வில் களப்பணிகள்** (2023)
    க. சுபாஷிணி ரூ.120

18. **தமிழகத்தில் பௌத்தம்** (2023)
    தேநிமாழி ரூ.120

19. **நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு** (2023)
இ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.300

20. **நீலக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** (2023)
நரசய்யா ரூ.150

21. **பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்** (2023)
அ. கா. ஈஸ்வரன் ரூ.180

22. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 1** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

23. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 2** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

24. **நக்கீரர் நடைப்பயணம்** (2024)
ப. பாண்டியராஜா ரூ.180

25. **தமிழர் புலப்பெயர்வு உலகளாவிய பயணங்கள்-குடியேற்றங்கள்-வரலாறு** (2024)
க. சுபாஷிணி ரூ.500

26. **கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்** (2024)
நா. கண்ணன் ரூ.220

27. **வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம்-நகரும் நகர்ப்புறமும்** (2024)
இ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.320

28. **தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கியகடல்களும் கடல்கொண்டநிலங்களும்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.140

29. **தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.120

30. **சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்** (2024)
தமிழ் மரபு அறக்கட்டளை ரூ.120

31. **மக்கள் வரலாறு: தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1** (2024)
க. சுபாஷிணி ரூ.200

32. **தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்** (2024)
க. சுபாஷிணி ரூ.180

33. **மட்டக்களப்பு: வரலாறு, சமூகம், பண்பாடு** (2024)
ஆ.பாப்பா, மு.இறைவாணி ரூ.280

34. **தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்** (2024)
தேமொழி ரூ.250

35. **தூரக் கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா** (2025)
நா. கண்ணன், க. சுபாஷிணி, சூ. ஆம்ஸ்ட்ராங் ரூ.250

36. **விண்ணை நோக்கி இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்** (2025)
தேமொழி ரூ.180

37. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 2** (2025)
க. சுபாஷிணி ரூ.250

38. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 3** (2025)
க. சுபாஷிணி ரூ.250

39. **தமிழ் வலசை** (2025)
சிவ இளங்கோ ரூ.150

40. **மின்தமிழும் செம்மொழியும்** (2025)
நா. கண்ணன் ரூ.220

41. **வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்** (2025)
தேமொழி ரூ.50

42. **Ancient Tamil Corpus:A key to understand the Indus Riddle** (2025)
Tamil Heritage Foundation ரூ.120

43. **மணிமேகலையின் பௌத்தப் பேரறம்** (2025)
அரங்கமல்லிகா ரூ.300

44. **Life and Achievements of Chola Emperor Rajaraja I Redefined** (2025)
Sundhar Bharadhwaj ரூ.450

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பக நூல்களை சென்னையில். **டிஸ்கவரி புக் பேலஸ்; ஆழி பதிப்பகம்; எமரால்ட் பதிப்பகம்** ஆகிய இடங்களில் நேரில் வாங்கலாம்.
நூல்களை **இணையம் வழியாக** கீழ்க்காணும் தளங்களில் பெறலாம்:

1. https://www.commonfolks.in/books/tamil–heritage–foundation
2. https://wisdomkart.in/books–publication/tamil–heritage–foundation/

2026 புதிய வெளியீடு: "ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் அடையாளம் காணுதலும் ஆவணப் படுத்தலும்"
முனைவர் க. சுபாஷிணி

தமிழ் மரபு அறக்கட்டளை

Tamil Heritage Foundation

THF

தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள்,
ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி
தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை